www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—29 பிப்ரவரி '88

3-7

விலை : ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

காங்கிரச ஜனநாயகம்



# மந்தைகளாக மந்திரிகள்!

படிப்பகம்

# அபலைப் பெண்ணும் போலீசு மிருகங்களும்

முகவரி இல்லாமல், சென்னைக்கு காதலனைத் தேடி கன்னியாகுமரியிலிருந்து தனியாக வந்த ஒரு அபலை பெண்—சினிமாவில் நடிக்கும் ஆசையில் ஆந்திராவிலிருந்து பெற்றோரைப் பிரிந்து சென்னைக்கு வந்த ஒரு இளம் பெண்... சென்னை—சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நீண்ட நேரம் தனியாக நின்று கொண்டிருந்த இப்பெண்ணை கண்காணித்த போலீசார் (சமயத்தில், பெண் போலீசார் என்று குறிப்பாக எழுதுவதும் உண்டு) அணுகி விசாரித்ததில் பின் வரும் உண்மை தெரிய வந்தது... என்று இரண்டு ‘காலம்’ அளவுக்கு ஒரு சோகக்கதையை எழுதி விட்டு...அப்பெண்ணை பெற்றோரிடம் ஒப்படைக்க போலீசார் முயற்சி, ...அந்த பெண்ணை போலீசார் அனாதை இல்லத்தில் சேர்த்தனர் என்று தினமும் தினசரி பத்திரிக்கைகளில் செய்தி வருவது உண்டு.

போலீசு கும்பலுக்கு இப்படி ஒரு தீராத ஆசை, மக்கள் தங்களையும் மனிதர்களாக, மனிதாபிமானம் மிக்கவர்களாக கருத வேண்டும் என்று! ஆனால், மக்களுக்கோ போலீசு கும்பல் என்றாலே ஓநாய்களும், நரிகளும் கழுகுகளும், காக்கைகளும்தான் நினைவுக்கு வருகிறது. என்ன செய்வது? நேரடி அனுபவங்கள் அப்படித்தான் இருக்கிறது. உதாரணத்திற்கு 21-1-83 அன்று தினதந்தி சென்னை பதிப்பில் ஒரு செய்தி வந்தது. “மாமனை சந்திக்க கோவையிலிருந்து சென்னை வந்த ஒரு இளம் பெண்”—“அப்பெண் தற்கொலை போலீசார் விசாரணை” என்று எழுதியது. உண்மையை அறிய நாமும் அதைப்பற்றி விசாரிப்போம் என்று கிளம்பினோம்... விபரத்துக்குள் போவதற்கு முன்பாக முதலில் கொலையாளிகளை உங்களுக்கு அறிமுகப்படுத்தி விடுகிறோம்.

கரிராமன்: சென்னை—விருகம்பாக்கம் போலீசு நிலைய குற்றப்பிரிவுசப்—இன்ஸ்பெக்டர். கோவையிலிருந்துதனியாக தன் மாமனைத் தேடி வந்த விஜயா என்ன அந்த அபலைப் பெண் (தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், பிளஸ் 2 வரை படித்தவர்) பயணம் செய்த பெட்டியில் (20-1-88) சேலத்தில் இருந்து இவர்தன் குடும்பத்துடன் சென்னை வந்து இருக்கிறார். கரிராமன் மனைவியுடன் பேசிக் கொண்டு வந்த அப்பெண், தன் நிலையைச் சொல்லி உதவி கேட்டிருக்கிறார். மனமிரங்கிய கரிராமன் மனைவி தன் கணவரிடம் அப்பெண்ணுக்கு உதவுமாறு கோரியிருக்கிறார். சென்னைக்கு வந்தவுடன் கரிராமன் தன் குடும்பத்தை அனுப்பிவிட்டு அப்பெண்ணை தன்னோடு அழைத்துச் சென்று இருக்கிறார்.

ரகுபதி: சென்னை — அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் சாலையில் உள்ள 477 நெ. வீட்டில் வசிப்பவன். போலீசுக்கு ஆள் காட்டி. கரிராமன் ஏற்கனவே அம்தூர் ஜி. 1 போலீசு நிலையத்தில் பணிபுரிந்தபோது அவனுடைய கையாளாக இருந்தவன். இவனுடைய வீட்டில்தான் அந்த அபலைப் பெண் கற்பழித்து கொலை செய்யப்பட்டாள்.

முத்துசாமி: அம்பத்தூர் ஜி. 1. போலீசு நிலைய சப்—இன்ஸ்பெக்டர். கரிராமன் கூட்டாளி. தன் கீழ் பணிபுரியும் ஜேம்ஸ் (பி. சி. 377) என்ற போலீசுகாரரை கோவைக்கு அனுப்பி, கொலை செய்யப்பட்ட அபலைப் பெண்ணின் பெற்றோரை மிரட்டி சென்னைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்தவன்.

டாக்டர் நித்தியானந்தம்: கொலை செய்யப்பட்ட பெண் விஜயாவை பிரேத பரிசோதனை நடத்தியவர். அந்த அபலை கற்பழித்து கொலை செய்யப்பட்டாள் என்று தெரிந்தும் உண்மைகளை மூடி மறைப்பவர். “பிரேத பரிசோதனையில் எதுவும் தெரியாது, ரசாயன பரிசோதனைக்கு பிறகுதான் எதுவும் கூற முடியும்” என விஞ்ஞானத்துக்கு விரோதமான ‘குண்டை’ தூக்கி போடுபவர்.

இனி நடந்த சம்பவத்தை சுருக்கமாக பார்ப்பேரம்.

மாமன் வீட்டில் விடுவதாக சொல்லிஅந்தஅபலைப் பெண்ணை தன்னுடன் அழைத்து வந்த கரிராமன் இங்கும் அங்கும் சுற்றிவிட்டு 21-1-88 அன்று விடியற்காலை 8 மணிக்கு மேல் அம்பத்தூர் ரகுபதி வீட்டில் வைத்து கெடுத்து இருக்கிறான். கரிராமன் போனவுடன், ரகுபதி அருகில் இருக்கும் அம்பத்தூர் போலீசுநிலையத்திற்கு சென்று விபரத்தைச் சொல்லி அங்கிருந்தவர்களையும் அழைத்திருக்கிறான். மீண்டும் மூன்று போலீசு நாய்கள் அந்த அபலைப் பெண்ணிடம் தங்கள் வெறியை தீர்த்துக் கொண்டிருக்கின்றனர். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த பக்கத்து குடித்தனக்காரர்களை போலீசு நாய்கள் மிரட்டி இருக்கின்றன. அவர்களும் இதுஅடிக்கடி நடக்கும் விசயம் என்பதால் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றனர். “அந்த பெண் இறந்துவிடவேதான் இது வெளியே வந்திருக்கிறது. இல்லையென்றால் பத்தோடு பதினொன்றாக இப்பெண்ணையும் காலையில் துரத்தி அடித்திருப்பார்கள், வெளியே தெரிந்திருக்காது” என்கிறார்கள்.

**தமாஅக அரசே!**

தவறான தகவல்கள் தந்து,
சமூக விரோதிகளுக்கு துணை போகும்
கம்யூனிஸ்ட் பேசும்
முதலாளி காம்ரேட்களை கைதுசெய்

இப்படிக்கு,

அம்பத்தூர் நகர பொதுமக்கள்.

கரிராமன் சொந்த செலவில் “அம்பத்தூர் நகர பொது மக்கள்” என்ற பெயரில் ஆயிரக்கணக்கில் துண்டு பிரசுரங்கள் அடித்து விநியோகித்து வருகிறான். தன்னுடைய செயலை நியாயப்படுத்த முயற்சிக்கிறான்.

உண்மை இப்படி இருக்க, போலீசு அறிக்கையோ புது ‘கரடி’ விடுகிறது.

ரகுபதி, (கரிராமன் அல்ல) கோவை சென்று திரும்பும்போது (பூசணிக்காயை அல்ல. யானையையே சோற்றில் மறைக்கிறார்கள்) அப்பெண்ணை பார்த்ததாகவும் அப்பெண் சொல்லியபடி கீழ்ப்பாக்கம்(?)சென்று அப்பெண்ணின் மாமாவை தேடியதாகவும், அவர் அங்கு இல்லை என்பதால், ரகுபதி தன் வீட்டில் அப்பெண்ணை தங்க வைத்ததாகவும், காதலன்(?) கிடைக்காததால் அப்பெண் மனமுடைந்து இரவில் அரளி விதையை அரைத்து குடித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் கதை எழுதிக் காண்பிக்கிறார்கள். கரிராமனுக்கும் இக்கொலைக்கும் சம்மந்தமே இல்லை என சாதிக்கிறார்கள்.

ஆனால் கொலையாளிகளை கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி ‘மார்க்சிஸ்ட்’ கட்சியின் பகுதிகுழு செய்த பிரச்சாரத்திற்கு கரிராமன்தான் நேரிடையாக ஓட்டுக்கட்சி பாணியில் எதிர்ப் பிரச்சாரம் செய்கிறான்.

அம்பத்தூர் பகுதி மக்கள் சொல்லியது மாதிரி, அந்த அபலைப் பெண் இறந்து விடவேதான் விசயம் இந்த அளவாவது வெளியே வந்தது. இல்லையென்றால் அந்த இளம் பெண் கற்பழிப்பும் பத்தோடு பதினோன்றாகத்தான் ஆகியிருக்கும்; பொதுமக்கள் வாய்மூடி மௌனியாய் இருக்கும்வரை.

● குமார்

மக்கள் கலை இலககியக் கழகம்
சென்னை.

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

7

16—29 பிப்ரவரி '88

உள்நாடு
தனி இதழ : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் ரூ 6
ஆண்டு சந்தா ரூ 144

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை–600 015.

# நள்ளிரவு நாடகம்: புதிய பாத்திரங்களில் பழைய நடிகர்கள்

பழைய காலத்து நாடகங்களில் நடப்பது போல எல்லாம் நடக்கிறது. மந்திரி வேஷத்தில் நடித்து முடிந்ததும் அவசர அவசரமாக ஒப்பனை அறைக்குள் நுழைவான் நடிகன். ஆடைகளை உருவி விசிவிட்டு, ஆர்மோனியக்காரன் பாட்டு முடிவதற்குள், சேலையைச் சுற்றிக் கொண்டு, ராணியின் தோழியாக அடுத்த காட்சியில் வந்து நிற்பான். மந்திரி வேசத்துக்குரிய மீசையைக் கலைக்காமல் வந்துவிட்டாலும் ஆபத்து! நாடகக் கொட்டாயே களேபரமாகி விடும்! அவ்வளவு வேகத்தில் நள்ளிரவு நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். அதாவது மத்திய மந்திரிகள், மாநில முதல்வர்கள், மாநில கவர்னர்கள்—மாநிலக் கட்சித் தலைவர்களின் பாத்திரங்களுக்கான நடிகர்களை மாற்றிக் கொண்டிருக்கிறது.

ராஜீவ்—ஜெயில்சிங் தகராறு, பேர் பாக்ஸ் விவகாரம், பீரங்கி—நீர்மூழ்கி ஆயுதபேர ஊழல் புகார்களைத் தொடர்ந்து மத்திய மந்திரி சபையே நிலை குலைந்து போயிருந்தது. பல்வேறு மாநிலங்களிலும் போட்டி காங்கிரசு கும்பல்கள் தோன்றியும், தேர்தல் தோல்விகள் கண்டும் ஸ்தம்பித்துப் போயிருந்தது. ஆளும் பாசிச கும்பலின் செல்வாக்கு சரிவதையும், எதிர்க்கட்சிகள் புதிய நம்பிக்கை பெறுவதையும் தடுத்து நிறுத்த ஆட்சியிலும், கட்சியிலும் பல மாற்றங்கள் செய்து புதிய தோற்றத்தை தருவார்கள் என்கிற ஊகம், வதந்தி ஏறக்குறைய ஒரு ஆண்டாக நிலவியது. கடைசியில் அந்த மாற்றங்கள் வந்துள்ளன. ஆனால் அவை பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சிக்கும் கட்சிக்கும் புதிய தோற்றத்தைக் கொடுக்கவில்லை. அதன் ஒட்டு மொத்த ஒட்டாண்டித்தனத்தையே நிருபிக்கின்றன.

மத்திய பிரதேசம், பீகார் முதல் மந்திரிகள் டெல்லி மந்திரிசபைக்கும், டெல்லியிலிருந்து இருவர் அந்த மாநிலங்களுக்கும் தூக்கியடிக்கப்பட்டார்கள். காரணம் எதுவுமே கூறாது ராஜஸ்தான் முதல்வரின கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டு, அமிதாப்பச்சனின் சாதிக்காரர் மாத்தூர் திணிக்கப்பட்டார், வி பி. சிங்கைத் துரத்துவதில் முன்நின்ற அதே சாதிக்காரும் அமிதாபின் ஆளுமான தினேஷ் சிங்; நேரு—இந்திரா குடும்பத்தின் பரம்பரை விசுவாச ஊழியர் ராம் நிவாஸ் மிர்தா—ஆகியோர் உட்பட 13 புதிய மந்திரிகள் புகுத்தப்பட்டுள்ளனர். ஊழல் பெருச்சாளி பஜன்லாலுக்கு விவசாயத்துறையை ஒதுக்கி மேலும்முக்கியத்துவம் அளித்துள்ளனர். இவை தவிர மத்திய மந்திரிகளின் இலாக்காக்கள் மாற்றிப் போடபட்டுள்ளது.

இந்த நள்ளிரவு நாடகத்தின் அங்கமாக மாநிலக் கவர்னர்கள் மாற்றப்பட்டுள்ளனர். புதியவர்களும் வந்துள்ளனர்—வெங்கிடசுப்பையா, ராம்துலாரி சின்கா, சுக்தேவ் பிரசாத், கோவிந்த் நாராயண்சிங், பிரம்மாணந்த ரெட்டி ஆகிய காங்கிரசுபெருச்சாளிகள், உளவுத்துறைதலைவராயிருந்த பாராரி—இவர்கள்தான் புதிய கவர்னர்கள். விரைவில் காங்கிரசு ஆளும் மாநிலங்களுக்கு புதிய கட்சித் தலைவர்கள்; வேறு கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மத்திய மந்திரிகளே கட்சித் தலைவர்கள் (அப்போதுதான் அதிகார முறைகேடும்ஆதிக்கமும் செய்ய முடியும்) என்று நியமிக்கப் போகிறார்கள்.

அடுத்த தேர்தலைக் குறி வைத்துத்தான் இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றன. சாதி, பிராந்திய—கோஷ்டி நலன்கள் ஆகியவற்றோடு தேர்தல் தில்லுமுல்லுகள் அடாவடித் தனங்கள் மூலம் காரியங்களைக் சாதிக்கவல்ல, அதே சமயம் நேரு—இந்திரா பரம்பரையின் விசுவாசமிக்க கொட்டைபோட்ட காங்கிரசின் பழம் பெருச்சாளிகள்தான் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

டெல்லி போய் பூடாசிங்கைச் சந்தித்துவிட்டு இரவு ஒரு மணிக்கு போபால திரும்பினார் ம.பி முதல்வர் வோரா. மாற்றம் எதுவும் இல்லையென்று பத்திரிக்கையாளரிடம் தெரிவித்தார். அதிகாலை 3 மணிக்கு டெல்லியிலிருந்து பூடாசிங் தொலைபேசியில் கூப்பிட்டு ராஜினாமாசெய்யும்படி கூறுகிறார். அடுத்த நாள் நள்ளிரவில் டெல்லியிலிருந்து வந்து குதிக்கும் அர்ஜுன்சிங், 248 காங்கிரசு எம்.எல்.ஏக்களில் 50 பேர் மட்டுமே கலந்து கொண்ட கூட்டத்தில் "ஏகமனதாக" முதல்வராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அதே நேரத்தில் 4 மத்திய காங்கிரசு தலைவர்களுடன் டெல்லியிலிருந்து தனிவிமானத்தில் பீகார்—பாட்னா வந்து குதிக்கிறார் பகவத்ஜா ஆசாத். 240 காங்கிரசு எம்எல்ஏக்களில் 88 பேர் மட்டுமே கலந்து கொண்ட கூட்டத்தில் ஆசாத் "ஏகமனதாக" தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதே நள்ளிரவு தனி விமானத்தில் ராஜினாமா செய்த முதல்வர் பிந்தேஸ்வரி துபே டெல்லிக்குப் பறக்கிறார். டெல்லியில் புதிய மந்திரிகள் பதவி ஏற்றுவிட்டு விருந்துக்குப் போய்விட்டனர். விருந்து முடிந்து மீண்டும் ஒருமுறை நடந்த நிகழ்ச்சியில் மந்திரி பதவியேற்கிறார்.

ஏன் இந்த நள்ளிரவு நாடகம்? காங்கிரசு கோஷ்டி சண்டைகள், காங்கிரசு ஜனநாயகம் ஆகியவற்றின் யோக்கியதை இதுதான்! வேண்டாத சுமையாகிப் போன மந்திரிகளை நீக்க முடியவில்லை! மந்திரிசபையில் காலி இடங்கள் விட்டு வைப்பதுகூட சில்ரைப் பதவிக்காக ஏங்க வைத்து கோஷ்டிச்சண்டையைக் கட்டுப்படுத்துமாம்! மக்களை கண்டு மட்டுமல்ல தனது கட்சி கோஷ்டிகளையும் கண்டஞ்சி இந்த நள்ளிரவு நாடகம் நடத்துகிறது பாசிச ராஜீவ் கும்பல். அதனால் மேலும் அசிங்கமாக அம்பலப்பட்டு வருகிறது. ○

படிப்பகம்

www.padippakam.com

# பாண்டியன் மட்டுமா...?

ஊர்ப் புறம் போக்கு நிலத்தில்மேய்ந்து கொழுத்து, வெயில் தாங்காமல் சேற்றிலே கடந்து புரண்டுவிட்டு தொழுவத்துக்குத் திரும்பும்போது எருமை மாடுகள் தவறாமல் ஒரு காரியம் செய்யும். ஊர் எல்லையைக் குறிப்பதற்கு ஆளுயரத்துக்கு நாட்டுக்கல் நட்டு வைத்திருப்பார்கள். உடம்பு அரிப்பெடுத்த எருமை மாடுகள் நாட்டுக்கல்லிலே போய்த் தினமும் தேய்த்துவிட்டுத்தான் தொழுவத்துக்குத் திரும்பும்.

சில நாட்கள் மண்டையிலே புழு நெளிவதைப் போல தினவெடுத்துப் போய் அந்த எருமை மாடுகள் "டமார் டாமரெ"ன்று ஒன்றோடு ஒன்று முட்டிக் கொள்ளும். அந்தச் சமயத்தில் நாட்டுக்கல்லையே பெயர்த்துவிடும் பலத்தோடு அதையும் போய் முட்டும். அதைப் போல காங்கிரசு எருமை மாடுகள் தமது உடம்புஅரிப்புக்காக ஊர் நாட்டுக் கல்லான சபாநாயகர் பாண்டியன்மீது தேய்த்துத் தேய்த்துச் சுகங்கண்ட நாட்களும் உண்டு. பிறகு தினவெடுத்துப் போய் ஒன்றோடுஒன்று முட்டி போதிக்கொண்டன. இப்போது நாட்டுக் கல்லையே பெயர்த்துவிடும் வேகத்தில் போய் முட்டுகின்றன.

பாண்டியனை சபாநாயகர் பதவியிலிருந்து விலக வேண்டும் அல்லது விலக்க வேண்டும் என்று காங்கிரசார் "போராடு"கிறார்களே அந்த வரைக்கும்தான் இந்த உதாரணம். மற்றபடி பாண்டியன் ஒன்றும் அப்பாவி நாட்டுக்கல் அல்ல! "கொணாரம் பிடித்த" எருமைமாடு போல தெருவிலே ஓடி போவோர் வருவோரை எல்லாம் இடித்துத் தள்ளி ஆர்ப்பாட்டம் செய்தவர் தான்!



இதிலே வேடிக்கைஎன்னவென்றால் நாட்டுக்கல்லையே வீழ்த்திவிடுவோம் என்று தீர்மானம் போட்டுக் கொண்டு காங்கிரசு எருமை மாடுகள் ஊர்வலமாகப் புறப்பட்டுவிட்டன. முதல்முறையாக அவர்கள் போராட்டம் (!) வேறு செய்கிறார்கள். ஜனவரி 28ந் தேதி சட்டமன்ற ரௌடித்தனங்களுக்கு பாண்டியன் மட்டும்தான் காரணமென்று கத்துகிறார்கள்.

தமிழக சட்டசபையிலே நடந்த சம்பவங்கள் "ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட வடு" என்று இந்த எருமை மாடுகள் தலைமை அறிவித்துள்ளது. முழுக்க முழுக்க குழப்பமும் கலவரமும் நடந்த அந்த நாள் இந்திய ஜனநாயகத்துக்கு ஒரு சோகமான நாள்; நமது ஜனநாயகத்தின் கீழ்த்தரமான சம்பவங்களில் ஒன்று தமிழக சட்டமன்றத்தில் அன்று நடந்தவை என்று வேதனைப்பட்டுள்ளது. யார்? பேர்பாக்ஸ், போபார்ஸ் விவாதங்களின்போது விசிலடித்து, மேசையைத் தட்டி, கூச்சல் போட்டு நாடாளுமன்ற கலாட்டா—ரௌடித்தனத்துக்குத் தலைமையேற்ற பிரதமர் ராஜீவ்.

– "சட்டம் அதன் கடமையைச் செய்யும். ஜனவரி 28இல், சட்டமன்றத்தில் சபாநாயகர் பாண்டியனின் நடத்தையின் ஒவ்வொரு அம்சமும் பரிசீலிக்கப்படுகிறது. பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மிரட்டுகிறார் காங்கிரசின் டெல்லிப் பெருச்சாளி கே. என். சிங். ஒரு கட்சிக்காரனுக்கு ஏது இந்த அதிகாரம் என்று கேட்க "ஜனநாயகபக்தர்"களுக்கு துப்பில்லை. "அவர் எப்படி நடந்து கொண்டார் என்று அரசும் நாடு முழுவதும் கண்டது; அவரால் வெட்கப்படுகிறது. இந்தக் கூட்டத் தொடருக்காக குண்டர்கள் சட்டமன்றக்காவலர்களாக அமர்த்தப்பட்டவர்கள் என்ற தகவல்கள் எங்களிடம் உள்ளன. முதல்முறையாக அறைக்குள் நுழைந்து உறுப்பினர்களைத் தாக்கும்படி போலீசார் ஏவிவிடப்பட்டுள்ளனர்" என்று பொருமுகிறது அந்தப் பெருச்சாளி.

இப்போது "பாண்டியன், பாண்டியன் மட்டும்தான் ஜனநாயகத்துக்கு கேடு விளைவித்து விட்டார். சபாநாயகர் பதவிக்குரிய புனிதத்தைக் கெடுத்துவிட்டார்" என்று குற்றஞ்சாட்டி முட்டித் தள்ளிவிட காங்கிரசு எருமைமாடுகள்போர்க்கோலம் பூண்டுவிட்டன. மத்திய மந்திரி சிதம்பரம் வெளியேற்றிவிடும் வேலையைச் செய்கிறார். பழநியாண்டி தலைமையேற்று இந்தத் தாக்குதலை நடத்துகிறார். அரசியலில் இருந்து கட்டாய ஓய்வு கொடுத்து விரட்டப்பட்ட கிழட்டு பெருச்சாளி சி. சுப்பிரமணியம் பாண்டியனுக்கு எதிரான போராட்டத்துக்கு "தத்துவார்த்த" தலைமைகொடுக்கிறார். முன்பு ராஜாஜி, பக்தவச்சலம், இப்போது சி. சுப்பிரமணியம். இப்படி அரசியலில் பல்லு பிடுங்கப்பட்டவர்களின் மரணப் படுக்கையைத் தேடிப் போய் காலாவதியான கருத்துக்களைக் கேட்டு எழுதும் முதலாளித்துவப் பத்திரிக்கைகள்—இவர்கள் அத்தனை பேரும் பாண்டியன் மீது பாய்கிறார்கள்.

மதிப்புக்குரிய சபாநாயகர் பதவியில் இருந்து கொண்டு வீரப்பன்—ஜானகி கும்பலின் கட்சிக்கூட்டத்தில் பாண்டியன் கலந்து கொண்டது தவறு; காங்கிரசு உறுப்பினர்கள் ராஜினாமா செய்த'தாக தொலைபேசி தகவலை வைத்துக் கொண்டு சபையைத் தள்ளிவைத்தது; ஜெயலலிதா கோஷ்டி உறுப்பினர்களைப் பதவியிழக்கச் செய்வதற்காக கட்சி மாறுவதை தடுக்கும் சட்டத்தைத் தவறாக பிரயோகித்தது; அவைக்குள் போலீசை ஏவி காங்கிரசு—ஜெயலலிதா அணி எம். எல். ஏக்களைத் தாக்கிவிரட்டிவிட்டு ஜானகி அரசுமீது நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பு நடத்தியது—ஆகியவை பாண்டியனின் குற்றங்களாக சுமத்தப்படுகின்றன.

"இவையெல்லாம் நான்மட்டும் புதிதாகச் செய்தவை அல்ல. நீங்களும் செய்திருக்கிறீர்கள். சபா

படிப்பகம்

www.padippakam.com

நாயகருக்கு சட்டபூர்வமாகத் தரப்பட்டுள்ள உரிமைகள்—அதிகாரங்களைத்தான் பயன்படுத்தியுள்ளேன். அதைக் கேள்வி கேட்பதற்கோ, நிராகரிப்பதற்கோ, தண்டிப்பதற்கோ சட்டப்படி வேறு யாருக்கும் உரிமையில்லை'' என்று பாண்டியன் கொடுக்கும் பதிலடிக்கு தகுந்த பதிலளிப்பதற்கு முதுபெரும் தேசியத் தலைமைக்கோ, மேல் நாட்டுக் கல்வி பயின்ற மந்திரிகளுக்கோ, ஊருக்கு உபதேசம்செய்யும் பத்திரிக்கைகளுக்கோ—யாருக்கும் வக்கில்லை.

''நாடாளுமன்ற சபாநாயகர்களாயிருந்த அனந்தசயனம் ஐயங்கார், தில்லோன், பகத் ஆகியோர் காங்கிரசு உறுப்பினர்களாக நீடித்தார்கள், காங்கிரசு வேட்பாளர்களாகப் போட்டியிட்டார்கள். இப்போதைய சபாநாயகர் பலராம் ஜாக்கரும் பல மாநில சபாநாயகர்களும் காங்கிரசு நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டார்கள். மேற்கு வங்க சபாநாயகரும் மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினருமான அலீமிடம் கட்சிப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றிக் கேட்டேன். அதில் ஒன்றும் தவறில்லை என்றார். திருச்செந்தூர் இடைத்தேர்தலில் காங்கிரசு வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தேன். அப்போதுமகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார்கள்'' என்று கூறுகிறார் பாண்டியன்.

''சுதந்திரமான்து, சுயாதிபத்திய உரிமை கொண்டது,விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது, புனிதமானது—சபாநாயகர் பதவி என்று வைத்துவிட்டு தூற்றுகிறீர்களே!'' என்று எதிர்க்கேள்வி கேட்.கிறார் பாண்டியன். ''சுமுகமான சூழ்நிலை உருவாவதற்காகபாண்டியன் விலக வேண்டும்'' என்கிறார் சிதம்பரம். ''தமிழ்நாட்டில்சுமுகமானசூழ்நிலைதான் நிலவுகிறது. பஞ்சாபில் ஒருநாளைக்கு பத்து, இருபது பேர் கொல்லப்படுகிறார்கள். உள்நாட்டு பாதுகாப்பு மந்திரி பொறுப்பில் இருக்கும் சிதம்பரம் தைரியமிருந்தால் அங்கே போய் பொறுப்பை நிறைவேற்றட்டும். நான் கோழை போல சபாநாயகர் பொறுப்பை விட்டுவிடமாட்டேன்'' என்று திருப்பித் தாக்குகிறார் பாண்டியன்.

''சபாநாயகர் பதவி பற்றி சிதம்பரம் பேசுவதே சிறுபிள்ளைத்தனமானது, பொறுப்பற்றது, தகுதியற்றது'' என்று சாடுகிறார் பாண்டியன். மக்களவையின் இதயத் துடிப்பு சபாநாயகர் பதவி. சட்டப்பிரிவு 179 படி, அவை கலைக்கப்படுவதிலிருந்து, புதிய அவையின் முதல் கூட்டம் வரை சபாநாயகர் நீடிக்கிறார். சபாநாயகர் பதவி ஒரு போதும் காலியாக முடியாது. அவை கலைக்கப்பட்டாலும் சட்டமியற்றும் உறுப்பு என்பதைக் குறிப்பதற்காக சபாநாயகர் நீடிக்கிறார். நிர்வாகம், நீதித்துறை, சட்டமியற்றும் உறுப்பு ஆகிய மூன்றும் அதேபோல ஜனாதிபதி, பிரதமர், தலைமை நீதிபதி, கவர்னர், மாநிலத் தலைமை நீதிபதி ஆகிய பதவிகள் காலியாக முடியாது; நீடிக்கும்''என்று வாதிடுகிறார், பாண்டியன்.

''நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் பாண்டியனை நீக்கலாம். ஏற்கனவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பைநிறுத்திவைத்தது, பத்திரிக்கை ஆசிரியரைத் தண்டித்தது போன்ற தவறுகள் செய்துள்ளார். கூடிய சீக்கிரம் அவரை நீக்கக் கோருகிறேன்'' என்றுபேட்டியளித்தார், சுப்பிரமணியம்.

சி.சு.வின் வாயடைக்கும்படி பதிலளித்தார் பாண்டியன்: ''என்னைத் தாக்கிப் பேசவோ, கூட்டத்தைப் பற்றி விவாதிக்கவே சுப்பிரமணியத்திற்கு அருகதையே கிடையாது. அவருக்கு எதிராக கோர்ட் அவமதிப்பு நோட்டீசுவிட்ட நீதிபதிகளைக் கண்டிக்கும் தீர்மானம் கொண்டு வந்து நீதித்துறையை சட்டமன்றத்துக்கு எதிராக நிறுத்தியவரே சி. சுப்பிரமணியம். அன்றைய முதல்வர் காமராஜ~ம், தலைமை நீதிபதி ராஜமன்னாரும் குறுக்கிட்டு மோதலைத் தவிர்த்தனர். ராஜமன்னார் கமிட்டி அறிக்கைப்படி நீதிபதிகளை பதவி விலக்கவும் சட்டசபைக்கு அதிகாரம் உண்டு. தவிர நீதிமன்றத் தீர்ப்பை மாற்றும் தீர்மானம் காங்கிரசு உட்படஏகமனதாக நிறைவேறியதுதான்.''

இவ்வளவு எருமை மாடுகளை தனியாக நின்று பாண்டியன் சமாளிக்கும் துணிச்சல் அசாத்தியமானதுதான்! இந்தச் துணிச்சலைக் கொடுப்பது எது தெரியுமா? பாண்டியனின் சொந்தத் திறமை அல்ல. முன்னுக்குப்பின் முரணான ஓட்டை உடைசல்களும், வசதி போல வளைத்துக் கொள்ளும் வாய்ப்புமுடைய அரசியல் நிர்ணய சட்டம் என்கிற போலி ஜனநாயகம் தான்! பாண்டியனின் கடந்த கால அக்கிரமங்களில் கூட்டாளிகளாக இருந்த காங்கிரசார்களே, பலமுறை சபாநாயகர் அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தியவர்கள் காங்கிரசார்களே—என்கிற ஆதாரம் தான்!

பாண்டியன், பாண்டிய'ன் மட்டும்தானா குற்றவாளி! இந்தக் காங்கிரசு எருமைமாடுகள் யோக்கியமானவையா?

● பாண்டியன் ஆனந்த விகடன் ஆசிரியரைத் தண்டித்தபோதும், நீதிமன்றத் தீர்ப்பை நிறுத்தி வைத்தபோதும் காங்கிரசு உடந்தையாயிருந்தது.

● ''டேய், மனோகராகொன்னுபுடுவேன்'' என்று மிரட்டியும் கருணாநிதி பற்றிக் கேவலமாகவும் பத்திரிக்கைகளைப் பற்றி ஆபாசமாகவும் வசைபாடியும் சட்டசபையில் பாண்டியன் காட்டாட்சி நடத்தியபோதும் காங்கிரசாரும், எம்ஜிஆரும் கேட்டு ரசித்தனர்.

● திமுக எம்எல்ஏக்கள் பத்து பேர் பதவி பறித்ததற்கு உடந்தையாயிருந்த காங்கிரசார், ஜெயலலிதா கும்பல்மீது கட்சி தாவும் சட்டத்தை ஏவி பாண்டியன் நோட்டீஸ்விட்டபோது என்ன செய்தனர். இவர்களும், கவர்னரும் ஜெயலலிதா கும்பல் முறையிட்ட நீதிமன்றமும் சபாநாயகரின் உரிமை என்றுதானே ஒதுங்கிவிட்டனர்.

● கட்சித்தாவல் தடுப்புச் சட்டத்தை பதவி பறிப்புச் சட்டமாக பாண்டிச்சேரியிலும், பஞ்சாபிலும், காஷ்மீரிலும் காங்கிரசு கும்பல் பயன்படுத்தவில்லையா?

● சபாநாயகர் பதவியை ஆளும் கும்பலின் கைத்தடியாகக் கொண்டு, எதிர்க்கட்சிகளை அடக்குவதற்காக அது புனிதமானது; சுயாதிபத்திய உரிமையுடையது, வானளாவிய அதிகாரம் படைத்தது என்கிறமுறையில் வைத்துக் கொண்டு பலநூறு பாண்டியன்களாக பாசிச முறையில் அடக்குகிறார் பலராம் ஜக்கர்.

● எம்ஜிஆர் கட்சியைப் பிளவுபடுத்தி கொல்லைப்புற வழியாக ஆட்சியைப் பிடிக்க முயன்ற தாங்களே உடைந்துபோன ஆத்திரத்தில் சட்டமன்ற ரௌடித்தனத்தை தொடங்கியதே காங்கிரசு தான்.

✱ காங்கிரசு — ஜெயலலிதா கும்பலைச் சேர்ந்த சிறுபான்மை போட்டி சட்டசபை நடத்தி தீர்மானம் நிறைவேற்றியது. சாத்தூர் ராமச்சந்திரன் தலைமையில் குண்டர்படை கொண்டு வந்தது காங்கிரசு—ஜெயலலிதா கும்பல் எம் பி உட்பட காங்கிரசு எம்எல்ஏக்கள் ரௌடித்தனம் செய்ததுக்கு ஆதாரங்கள் உள்ளன.

கடைசியாக—

● பாண்டியன் மட்டுமா, புனிதமான பதவிகளாகப் பீற்றிக் கொள்ளும் ஜனாதிபதியும், கவர்னரும் வீரப்பன்—ஜானகி கோஷ்டிக்கு ஆதரவாக நடந்து கொண்டார்களே! அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி இவர்கள் ஏன் முயலவில்லை. இந்தக்கேள்விக்கு பதில் சொல்ல மறுக்கின்றன வெட்கங்கெட்ட ''தேசியங்கள்'' இந்து, எக்ஸ்பிரஸ், சி. சு, கே.என் சிங், சிதம்பரம் அத்தனையும்தான்!

ஏன் இந்த வேசித்தனம்! நாடாளுமன்ற—சட்டமன்ற ஜனநாயகக் கேலிக்கூத்தை மக்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக பாண்டியனை மட்டும் பலிகடாவாக்குவதற்கே!



படிப்பகம்

www.padippakam.com



## போபர்ஸ்:

# பாசிச கும்பல் அடித்த பகற்கொள்ளை

## அம்பலமாகும் ஆதாரங்கள்

போபர்ஸ் ஆயுதபேர ஊழலில் சிக்கிய ராஜீவ் 200 கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்து பீரங்கிகளை விற்ற போபர்ஸ் நிறுவனத் தலைவரையே கூட்டி வந்து விசாரணை நாடகமாடி, ஏதோ இதுவரைக்கும் தப்பித்தோம் என்று மூச்சுவிட நினைத்தபோது, மீண்டும் போபர்ஸ் பூதம் வெளிக்கிளம்பி அதன் குரல்வளையைநெறிக்கிறது.

போபர்ஸ் விவகாரத்தை ராஜீவ் கும்பலும் ஆயுத வியாபாரிகளும் மூடி மறைக்க முயற்சிக்கும் நிலையில், ஸ்வீடனின் 'எக்ஸ்பிரசன்' பத்திரிக்கையும், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் அருண்ஷோரியும் சேர்ந்து ஆயுத பேரத்தில் தரகுத் தொகை பெற்ற ஏஜெண்டுகள், தரகுத் தொகை கொடுக்கப்பட்ட தேதி, முகவரி, புனை பெயர், வங்கிக் கணக்கு எண் முதலான அனைத்தையும் பட்டியலிட்டுஅடுக்கடுக்காக ஆதாரங்களை அண்மையில் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்கள்.

கடந்த ஆண்டு ஏப்ரலில்"போபர்ஸ் விவகாரத்தில் யாராவது துளி அளவு ஆதாரம் காட்டிலும்உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பாராளுமன்றத்தில் சவடால் அடித்தார் பாசிச ராஜீவ். "போபர்ஸ் ஆயுதபேரத்தில் இடைத்தரகர்களே கிடையாது; ஊழல்எதுவும் நடக்கவில்லை" என்று ராணுவக் கமாண்டர்களின் அரையாண்டு மாநாட்டில் பேசியபோது நம்பச் சொன்னார். எதிர்கட்சிகளின் கூச்சலில் இது எடுபடாமல் போய் விடுமோ என்றஞ்சி, "தேசத்துக்கு ஆபத்து; இந்தியாவை சீர்குலைக்க அந்நிய சக்திகள் சதி செய்கின்றன" என்று நாடுமுழுவதும் பிரச்சாரம் செய்து ஆத்திரமூட்டி தேசிய வெறியூட்டினார்.

ஆனால் அத்தனையும் பொய். அயோக்கியத்தனம் என்று இப்போது அம்பலமாகி சந்தி சிரிக்கிறது.

போபர்ஸ் குற்றவாளிகளைக் கண்டறிய ஸ்வீடன் அரசு ரின்பெர்க் என்ற அரசு தரப்புமுதன்மை வழக்கறிஞர் மூலம் விசாரணை நாடகம் நடத்தியது. ஆனால் போபர்ஸ் நிறுவனம் விசாரணைக்குஒத்துழைக்கவில்லை. ஸ்விடன் ரகசிய சட்டப்படி இதற்குமேல்நிர்பந்திக்க உரிமையில்லையாம்!

இதற்கிடையே சமீபத்தில் நடந்த ஆறு நாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் பங்கேற்க கொள்ளையர் ராஜீவ்ஸ்வீடனுக்குப் பறந்து போனார், ஸ்வீடன் பிரதமரிடம் ராஜீவ் தனிப்பட்ட முறையில் பேசினாராம். கொள்ளையை மூடிமறைக்க கொள்ளையர்களிடையே சரி கட்டும் ரகசிய சதி அரங்கேறியது. அவ்வளவுதான்! ராஜீவ் டெல்லி வந்து சேருமுன்னரே ரின்பெர்க் தனது விசாரணையை மூட்டை கட்டிவிட்டதாக அறிவித்தார்.

ரின்பெர்க் விசாரணையை மூட்டை கட்டிவிட்ட பிறகு 'எக்ஸ்பிரசன்' பத்திரிக்கை தான் சேகரித்த புதிய தகவல்களை அவிழ்த்து விட்டு அம்பலப்படுத்தியது. அருண்ஷோரியும் இதில் கூட்டு சேர்ந்து கொண்டார். 'உங்களால் கண்டறிய முடியாததை உங்கள் நாட்டு பத்திரிக்கைகள் கண்டறிந்து அம்பலப்படுத்துகின்றனவே?' என்று ரின்பெர்க்கிடம் வெளிநாட்டு பத்திரிக்கையாளர்கள் கேட்டபோது, "ஸ்விடன் நாட்டு பத்திரிக்கைகளை நம்பாதீர்கள்; அவை வதந்தியைப்பரப்புகின்றன"என்று கொள்ளையருக்குஅனுசரணையாக பேட்டியளிக்கிறார். இங்கே பாசிச ராஜீவ், "பத்திரிக்கைகள் பரப்பும் வதந்திகளை நம்பாதீர்கள்" என்று எதிரொலிக்கிறார்.

இடைத் தரகர்களே இல்லையென்று ராஜீவ் சாதித்தது அனைத்துமே பொய். போபர்ஸ் நிறுவனம் ஏராளமான இடைத்தரகர்களைக் கொண்டுதான் வியாபாரத்தை நடத்தியுள்ளது.

1983 நவம்பரில் ஏ.இ. சர்வீ லிமிடெட் என்ற கம்பெனி இடைத்தரகனாக நியமிக்கப்பட்டது. ஹோவிட்சர் பீரங்கி ஒப்பந்தம் கையெழுத்தானதும் '86 மார்ச்சில் அந்த நிறுவனத்துக்கு ரூ 10 கோடி கமிஷன் (தரகு) தொகையாக அளிக்கப்பட்டது. இந்தத்தொகை ஜூரிச்சில் உள்ள நார்ட் பைனான்ஸ் பேங்கில் வங்கிக் கணக்கு எண் 18051—54ல் செலுத்தப்பட்டது.

அடுத்த பெரிய தரகனாக செயல்பட்டது ஸ்வென்ஸ்கா நிறுவனம் ஐந்து நாட்டு கரன்சிகளாக, பதினாறு தவணைகளில் 1986ல் ஒன்பது மாதங்களில் ரூ 40 கோடி தரகுத் தொகையாக செலுத்தப்பட்டது. ஜெனிவாவில் அதன் வங்கிக் கணக்கு எண் TU 99921.

பனாமாவில் உள்ள ஸ்வென்ஸ்கா நிறுவனம் மாஃபியா குண்டர் படைத் தலைவன் ஸ்டீவன் சாமோசுக்குச் சொந்தமானது. எழுபதுகளில் தென்னமெரிக்க நாடுகளுக்கு போதைப் பொருட்களைக் கடத்தும் முக்கிய புள்ளியாக இருந்து வந்தான். பின்னர் அரசியல், நிதி, ஆயுத விற்பனை முதலானவற்றில் படிப்படியாக முன்னேறி விட்டான். அவனது இன்னொரு கம்பெனியின் பெயர் அமல்கமேட் கமர்ஷியல் என்டர்பிரைசஸ். கடந்த ஆண்டு இந்த ஆயுத வியாபாரக் கம்பெனி மூலம் அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சிஐஏவுடன்தொடர்பு கொண்டு அதன் மூலம் ரகசியமாக ஆயுதங்களைப் பெற்று, அவற்றை நிகரகுவா எதிர்ப்புரட்சி கும்பலான காண்ட்ராசுக்கு சப்ளை செய்துள்ளான்.

இதேபோல, ஈரானுக்கு அமெரிக்கா ரகசியமாக ஆயுதங்களை விற்றதும் இந்த மாஃபியா கம்பெனி மூலமாகத்தான் நடந்துள்ளது என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த கள்ள வியாபாரத்தில் அமெரிக்காவுக்குக் கிடைத்த லாபத் தொகை இந்தக் கம்பெனி மூலமாகவே காண்ட்ராசுக்கு கொடுக்கப்பட்டது. பனாமா நாட்டின் ரகசிய சட்டத்தின்படி இச்சமூக விரோத கும்பல்மீது நடவடிக்கை எடுக்கவோ, ஏன் விசாரித்தறியவோ கூட முடியாது.

பீரங்கி வியாபாரத்தில் தரகனாகச் செயல்பட்ட மற்றொரு கம்



படிப்பகம்

www.padippakam.com

பெனி மோரெஸ்கோ. இது கமிஷனாக பத்து கோடி ருபாயை ஒன்பது தவணைகளில் பெற்றுள்ளது. இதில் நான்கு தவணைகள் 'லோட்டல்' என்ற புனைபெயரிலும் (லோட்டல் என்றால் தாமரை; தாமரை என்றால் சமஸ்கிருதத்தில் ராஜீவ்) பிற நான்கு தவணைகள் 'துலிப்' என்ற புனை பெயரிலும், மற்றொரு தவணை மவுண்ட் பிளாங் என்ற புனை பெயரிலும் தரகுத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

இடைத்தரகர்களின் பெயரையோ, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தரகுத் தொகை, வங்கிக் கணக்கு எண் முதலானவற்றைக் கூறுவது எங்களது வியாபார ரகசியத்தை மீறுவதாகும். நான் எதுவுமே கூறமுடியாது" என்கிறார்போபர்ஸ் நிறுவனத்தின் தலைமைக் கம்பெனியான நோபல் தொழிற்சாலைகளின் தலைவர் கார்ல் பெக்.

இதே உத்தியைக் கையாண்டு ராஜீவ் கும்பலும் உண்மைகளை மூடிமறைக்க முயலுகிறது. போபர்ஸ் சாவு வியாபாரிகள் தங்கள் வியாபார ரகசியத்தைக் காட்டி உத்தம வேடம் போடுவதைப் போலவே, பாசிச ராஜீவ் கும்பல் அரசாங்க ரகசிய சட்டத்தைக் காட்டி எந்த உண்மையையும் வெளியே விடாமல் நாடகமாடுகிறது. "போபர்ஸ் ஊழல் குற்றவாளிகளைக் கண்டறிய பாராளுமன்றக் கூட்டுக் கமிட்டி செயல்பட்டு வருகிறது. அதுதான் கண்டறிந்த உண்மைகளை பாராளுமன்றத்தில் கூறுவதற்கு மட்டுமே உரிமை உண்டு. இடையில் அதுபற்றி கூற இயலாது" என்று பல்பிடுங்கப்பட்ட பாராளுமன்றக் கூட்டுக் கமிட்டித் தலைவரும் காங்கிரசு பெருச்சாளியுமான சங்கரானந்த் கூறுகிறார். இதே போல, ஸ்வீடன் அரசும், ரின்பெர்க் கமிஷன் அறிக்கையை வெளியிட மறுக்கிறது. விசாரணையில் இந்தியா சம்பநதப்பட்ட விபரங்கள் இருந்தால் இந்திய அரசுக்குத் தெரிவிப்போம் என்கிறது.

ஆக, கொள்ளையர்கள் உண்மை வெளிவராதபடி திறமையாக விசாரணை நாடகமாடுகிறார்கள். சட்டப்படி விசாரித்தறிய முடியாத பனாமா போன்ற நாடுகளில் பதுங்கிக் கொள்கிறார்கள். இன்றுவரை மூச்சுவிட மறுத்த சங்கரானந்த், தரகர்களாக செயல்பட்ட நிறுவனங்களைப் பற்றிய விபரங்கள் அம்பலமானவுடன், 'மூன்று கம்பெனிகள்தான் செயல்பட்டுள்ளன; ஆனால் அவை இந்தியர்களுக்குச் சொந்தமில்லை. வரும் பாராளுமன்ற கூட்டத் தொடரில் எங்கள் அறிக்கையை சமர்ப்பிப்போம்' என்று ஏதோ புதிதாக கண்டறிந்துவிட்டது போல நாடகமாடுகிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் சுவீடன் நாட்டு விசாரணையில் போபர்ஸ் நிறுவனம் 11 கம்பெனிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக ஒப்புக் கொண்டது. பின்னர் மூன்று கம்பெனிகள்தான் என்று பித்தலாட்டம் செய்தது. ஸ்வீடன் நாட்டு சட்டத்துக்கு விரோதமாக ஈரானுக்கு ரகசியமாக ஆயுதங்கள் விற்றதற்காகவும், சிங்கப்பூரிலுள்ள ஆயுத பேரக் கம்பெனிக்கு லஞ்சம் கொடுத்ததற்காகவும் சுவீடனிலும் சிங்கப்பூரிலும் போபர்ஸ் நிறுவனத்தின்மீது குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.



இத்தகைய மகாமோசடிபோபர்ஸ் கம்பெனியின் தலைமை நிறுவனம் தான் நோபல் தொழிற்சாலைகள். உலகசாவு வியாபாரிகளான நோபல் ஆயுதத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் லாபத்தைக் கொண்டுதான் உலக சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது. என்னே அயோக்கியத்தனம்! மக்களைக் கொன்றொழிக்க ஆயுதங்களை உற்பத்தி செய்து கொண்டே சமாதானம் பேசும் சைவப்புலியாக நாடகமாடுகின்றனர் இச்சாவு வியாபாரிகள். அவர்கள் காட்டியபாதையில் அதிநவீன ஆயுதங்கள் முதல அணுஆயுதங்கள் வரை குவித்துக் கொண்டு சமாதானம் பற்றி ஆறுநாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் சவடால் அடிக்கிறார், போபர்சிடமிருந்து கோடி கோடியாய் லஞ்சம் பெற்ற பாசிச ராஜீவ்.

மற்றெல்லா தொழில்களையும் விட ஆயுத விற்பனை மூலம்தான ஏகாதிபத்தியவாதிகள் கூடுதலாகக் கொள்ளையடிக்கிறார்கள். அதே போலத்தான ராஜீவ் கும்பலும் ஆயுத பேர ஒப்பந்தங்கள் மூலம் நாட்டையே சூறையாடுகிறது. ஆயுதக் கொள்ளையர்களின், குற்றவாளிகளை தப்புவிக்க நடத்தும் விசாரணை நாடகத்தை இனியும் நம்புவதில் பலனில்லை. இந்நாட்டுச் செல்வங்களை பாசிச கும்பல் ஒட்டச் சுரண்டுவதற்கு முன் இந்தியாவின் மார்க்கோஸை தண்டித்து விரட்டியடிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# தோட்டாக்களால் துளைக்கப்படும் ஒப்பந்தம்

**பா**சிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல் எவ்வளவு பிடிவாதமாகத் தனது சதிகளை அமுல்படுத்த முயலுகின்றதோ அவ்வளவு வேகமாக அவை தகர்ந்து போகின்றன. ஈழத்தில் போராளிகளின் கொரில்லா யுத்தத்தை அடக்குவதற்கு இந்திய இராணுவம் கடைசியாக மேற்கொண்ட "புலிகளைத் தேடி அழிக்கும்" வேட்டையிலும் அது தோற்றுப்போனது. 'மக்கள் விடுதலை முன்னணியின் தனிநபர் பயங்கரவாதத்தை முறியடிப்பதில் இலங்கை இராணுவம் தோற்றுப் போனது.

இலங்கையின் எம்ஜிஆராக, போலிக் கம்யூனிஸ்டுகள், போலி சோசலிஸ்டுகள், ருஷ்ய அடிவருடிகளால் உருவாக்கப்பட்டு வந்த சினிமா நடிகர் விஜய குமாரனத்துங்கே, ஜே. வி. பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இலங்கையின் மூன்று "இடது சாரி' கட்சிகள் மற்றும் ஈழ துரோக அமைப்புகளின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயாரிக்கப்பட்டவர் குமாரனத்துங்கே. முன்னாள் பிரதமர் பண்டாரநாயகேவின் மருமகனான இவர் ஈழ மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரிப்பதாகவும், இன ஒற்றுமைக்குப் பாடுபடுவதாகவும் நடித்துக் கொண்டே ரஷ்ய ஆதரவு சக்திகளின் சார்பாக ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தைத் தூக்கிப் பிடித்தவர். விஜய் குமாரனத்துங்கே, ஒரு சமரசவாதிக்குரிய தண்டனையைத்தான் பெற்றுள்ளார்.

விஜய குமா ரனத்துங்கே மற்றும் ஜெயவர்த்தனேயின் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஹர்ஷா அபெயவர்த்னே உட்பட அரசியல் பிரமுகர்கள், ஊழியர்கள், போலீசார் பலரும் தொடர்ந்து ஜே. வி. பி யினால் அழித்தொழிக்கப்பட்டு வருகின்றனர். ஜே. வி. பியை அடக்கி தென்னிலைங்கையில் அமைதியை நிலை நாட்டி வருவதாக ஜெயவர்த்தனே பீற்றிக் கொள்ளும் போதே தனிநபர் அழித்தொழிப்புகள் அதிகரித்து வருகின்றன.

அதே போல ஈழத்தில் அமைதி வேகமாகத்திரும்புகிறது; விரைவில் இந்திய இராணுவம்தனது பணியை முடித்து தேர்தலுக்கான சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்று பாசிசராஜீவ் கும்பல் கூறிவருகிறது. ஆனால் நிலைமையோ அதற்கு நேர் எதிராகப் போகிறது. புலிகளைத் தவிர அனைத்து ஈழ அமைப்புகளும் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாக பாசிச ராஜீவ் கும்பல் புளுகியது. உண்மையில் புலிகள் தவிர வேறு சில சிறு அமைப்புகளும் இந்திய ஆக்கிமிப்பை எதிர்த்து வருகின்றன. இந்திய உளவுப்படையான ராவின் சதி வேலைகளினால் பிளவு படுத்தி, புலிகளுக்கு எதிராக ஆயுதங்களும், பயிற்சியும், பணமும் கொடுத்து உருவாக்கப்பட்ட ஈழ துரேரகக் கூட்டணிகளும் அமைப்புகளும் இப்போது கலகலத்து வருகின்றன.

பிளாட், டெலோ, ஈ. பி. ஆர். எல். எஃப் ஆகிய மூன்றும் இணைந்து மூன்று நட்சத்திர முன்னணி அமைக்கப்பட்டது. இவற்றிலிருந்து பிரிந்து போயிருந்த சிறு அமைப்புகளை இணைத்து ஈழ தேசிய ஜனநாயக முன்னணி (ஈ. என். டி. எல். எஃப்) உருவாக்கப்பட்டது. புலிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஈரோஸின் தளபதி சங்கர் போன்ற ராவின் ஏஜெண்டுகளைக்கொண்டும், பாலகுமாரனை மிரட்டியும் ஒப்பந்தத்தை ஏற்கும்படி நிர்பந்தம் செய்து இழுத்துக் கொண்டது — இப்படி ஏற்பட்ட ஈழ துரோக அணி இப்போது சிதறுகிறது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும், யாழ்ப்போரும் இந்த துரோக அணியிலிருந்த பல போராளிகளை விழிப்படையச் செய்து விட்டன.

யாழ் போருக்குப் பிறகு ஈ பி ஆர். எல். எஃபின் ஒரு பிரிவு போராளிகள் இந்திய எதிர்ப்பு கொரில்லா நடவடிக்கைகளில் இறங்கினர். ஈ என் டி எல் எஃப் அணியின் டக்ளஸ் தேவாவின் தலைமையில் 150—170 போராளிகள் இந்திய இராணுவத்துக்கு எதிராகத் திரும்பினர். இவர்கள் இந்திய இராணுவத்துக்கு விடுதலைப் போராளிகளைக் காட்டி கொடுக்கும் டெலோ மற்றும் ஈ பி ஆர் எல் எஃப் துரோகிகளையும், ஈரோஸிலுள்ள ரா வின் ஏஜெண்டுகளையும் அழித் தொழிக்கின்றனர். இவை வழக்கமாக ஈழத்தில் போராளிகளுக்கிடையே நடக்கும் மோதல்களைப்போல சித்தரிக்கப்படுகின்றன. அப்படியே வைத்துக் கொண்டாலும் புலிகளுக்கெதிராக இந்திய உளவுப்படையினால் ஆயுதங்களும், பயிற்சியும், பணமும் கொடுத்து உருவாக்கப்பட்ட அணிகளுக்குள் நடக்கும் இந்த மோதல்கள் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பாளர்களுக்கு பாதகமானவையே!

ஈழத்துப் புதை சேற்றில் இந்திய இராணுவம் சிக்கிக் கொண்டு விட்டது; ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தம் செத்துப்போய் விட்டது என்று இந்திய மக்கள் உணரத் துவங்கிவிட்டார்கள், அதிகரித்து வரும் இந்திய இராணுவச் சாவுகளும், ஏறிவரும் இராணுவச் செலவுகளும் ராஜீவ் கும்பலின்

## ஈழபுதை சேற்றில் சிக்கிய இந்திய ராணுவம்



படிப்பகம்

www.padippakam.com

பொய்ப் பிரச்சாரத்தைவிட வலிய உண்மைகளாய் உள்ளன.

ஈழத்திலுள்ள இந்திய சிப்பாய்களே, குறிப்பாக தமிழர்கள் அதிருப்தியும் வெறுப்பும் அடைந்து வருகிறார்கள். ஈழத்திலிருந்து திரும்பும் இராணுவத்தினர் வெளிப்படையாகவே இதைச் சொல்லுகின்றனர். இந்த அதிருப்தி கலகமாக வெடித்துவிடக் கூடாது என்பதற்காக சுழற்சி முறையில் இராணுவத்தினரை மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். தினசரி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விமானங்கள் பறந்து கொண்டிருக்கின்றன.

கொரில்லா நடவடிக்கைகள் மூலம் இந்திய இராணுவத்தினரையும், இலங்கை போலீசையும், துரோகிகளையும் அழித்தொழிப்பதோடு மட்டக் கிளப்பு சிறை உடைப்பு, அரசு சிவில் நிர்வாகத்தை நிலைகுலையச் செய்வது, கடையடைப்புகள் நடத்துவது ஆகியவையும் வெற்றி பெற்றன. தொடர் உண்ணாவிரதமிருந்த தாய்மார்களின் ஈழ மக்கள் கமிட்டிகளின் கூட்டமைப்பு ஆகியன போரை நிறுத்தி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி கோரின.

ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பலின் நோக்கங்கள் பகற்கனவாகி வருவது நிச்சயமாகிவிட்டது. இருப்பினும் ஈழத்தில் அமைதி நிலைநாட்டப்பட்டு விட்டது; இந்திய—இலங்கை ஒப்பந்தம் நிறைவேறி விட்டது என்கிற மாயையை உருவாக்குவதற்கு முயலுகிறது. அதற்காக மேலும் ஏராளமாக இராணுவத்தைக் குவித்து வியத்நாமில் அமெரிக்கா செய்ததைப் போல "புலிகளைத் தேடி அழிக்கும்" நடவடிக்கையிலும், அதைத் தொடர்ந்து மாகாணத் தேர்தலைப் பலாத்காரமான—போலியானமுறையில் நடத்தவும் தீர்மானித்துள்ளது.

சமீப காலங்களில் கொரில்லாத் தாக்குதலும், மக்கள் போராட்டங்களும் அதிக அளவில் நடந்த மட்டக் கிளப்பு நகரில்—ஒன்றரை லட்சம் பேர் வாழும் நகரில் அரை லட்சம் இராணுவத்தினரைக் குவித்தது பாசிச ராஜீவ் கும்பல். ஊருக்கு வெளியே இரண்டு சித்திரவதை இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. 5 நாட்கள் முழு ஊரடங்கு பிறப்பித்து நகரத் தெருக்களைப் பாலைவனமாக்கியது. வீடு வீடாகப் புகுந்து தேடி தமிழ் ஆண்கள் அத்தனை பேரும் சித்திரவதை இராணுவ முகாம்களுக்கு இழுத்துப் போகப்பட்டார்கள். ஈழதுரோக அமைப்புகளின் முகமூடி போட்ட ஆள் காட்டிகள் முன்னே அடையாள அணிவகுப்பு நடத்தினர். "சோதனையிடப்பட்ட 30,000 பேர்களில் 131 பேர் புலிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள், அதில் 80 பேர் தீவிர உறுப்பினர்கள். நான்கு பேர் தலைவர்கள், அதில் ஒருவர் சயனைடு விழுங்கி மாண்டு போனார்" என்று அறிவித்துள்ளனர்.

"மட்டக்கிளப்பில் இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாகமுடிந்து விட்டது; புலிகளைத் தேடிப் பிடித்து விட்டோம்; சிலர் காடுகளுக்கும், கொழும்பு நகருக்கும் தப்பி ஓடிவிட்டனர்; இனி கிராமப் புறங்களிலும், வன்னி பகுதியிலும் தேடி அழிக்கும் பணிதொடரும்" என்று சகுனி தீட்சிதர் பேட்டியளித்துள்ளார். "ஆயுதங்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வருவது, கொரில்லா நடவடிக்கைகள் நீடிப்பது" பற்றிக் கேட்டபோது "அது நடக்கத்தான் செய்யும்; நாங்கள் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டே இருப்போம்" என்று ஒப்புக் கொண்டுள்ளார் பிரபாகரன் உட்பட புலிகளின் தலைவர்களைச் சுற்றி வளைத்து விட்டதாகவும், மட்டக்கிளப்பு ராணுவ நடவடிக்கை பெரிய வெற்றி என்றும் பொய்ப் பிரச்சாரம் வேறு செய்தனர். புலிகளுக்கு சில இழப்புகள் நேர்ந்தாலும் திட்டமிட்டுப் பின்வாங்குவதில் வெற்றி பெற்று விட்டார்கள் என்றே தெரிகிறது.

மேலும் இந்திய இராணுவத்தைக் குவித்து ஏப்ரல்வரை பெருமளவு தேடி அழிக்கும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது, போராளிகளை ஒடுக்கி அமைதி நிலைநாட்டப்பட்டு விட்டதாகவும், ஏதோ சிலதனிப்பட்ட தாக்குதலே நீடிப்பதாகவும் சொல்லி பலாத்காரமான—போலியான மாகாணத் தேர்தலை நடத்துவது என்று ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல் தீர்மானித்துள்ளது. படிப்படியாக இந்திய இராணுவத்தை விலக்கிக் கொள்வதாகப் பிரச்சாரம் செய்து கொண்டே ஒரு இரகசிய இராணுவ ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை இராணுவப் பயிற்சிக்காக ஆலோசகர்கள் மற்றும் பிராந்திய நலன்களைக் காப்பதற்காக இராணுவ முகாம்கள் மட்டும் இருபதாக ஏய்ப்பது என்றும் தீர்மானித்துள்ளது. இலங்கைமீது இந்திய ஆதிக்கத்தை நிரந்தரமாக நிறுவுவதற்கான எல்லா வேலைகளும் துவங்கி விட்டன. ஏற்கனவே எண்ணெய் வள ஆய்வு செய்வதற்கான குழு ஒன்று மன்னார் போய்ச் சேர்ந்து விட்டது.

இதே போன்ற மேலாதிக்க வெறியுடன் ஆப்கன்மீது படையெடுத்த ருஷ்யாவும், கம்பூச்சியா மீது படையெடுத்த வியத்நாமும் நேரடி இராணுவத் தலையீட்டின் சுமை தாங்க முடியாமல் விழி பிதுங்கி நிற்கின்றன. அப்படியொரு உயர்ந்த கட்ட நெருக்கடிக்குள் விரைவிலேயே பாசிசராஜீவ்கும்பல் தள்ளப்படும்!

✱ மாணிக்கவாசகம்



கொரில்லாத் தாக்குதல் : இந்திய ராணுவத்தைத் திகைக்க வைக்கும் புலிகளின் புதிய உத்திகள்.

## விலையேற்றம் ஏன்?

"திடீர் விலையேற்றம்; ஈழப் போரின் நேரடி விளைவு" என்று சென்ற மாதம் புதிய ஜனநாயகம் தலையங்கம் தீட்டியிருந்தது. இப்பொழுது சுரணை தட்டியுள்ள முதலாளித்துவ பத்திரிக்கைகளும் அதை ஒப்புக் கொண்டுள்ளன.

இலங்கையிலுள்ள இந்திய இராணுவத்துக்காக மார்ச்சு மாதத்தில் மட்டும் 2.10 லட்சம் கிலோ பச்சைக் காய்கறிகள், 1.36 லட்சம் கிலோ புது உருளைக் கிழங்குகள் 65030 கிலோ வெங்காயம், 3.7 லட்சம் கிலோ முட்டைகள்; 20.0 கறிக் கோழிகள் அனுப்புவதற்கு "டெண்டர்" (ஏலம்) விடப்பட்டுள்ளது. இவைதவிர 1.7 லட்சம் கிலோ காய்கறிகளும், 30,000 கிலோ பழங்களும், 500.0 கிலோ பாலும்பதப்படுத்தியவையாககோரி டெண்டர் விட்டுள்ளனர். 40,000 லிட்டர் கொசு, பூச்சி மருந்துகளும் 4.9 லட்சம் ஆடுகளும்கூட விமானத்தில் ஏற்றப்பட உள்ளன. (சிகரெட்டு, ரொட்டி, பிஸ்கட், டீ—காபி, சாக்லெட் மற்றும் தானிய உணவு வகைகள் இந்தக் கணக்கில் வராது.)

இப்படி, இலங்கைக்கு ஏற்றப்படும் இடம் சென்னையாக இருப்பதால் வழக்கமாக பெங்களூருக்குப் பிறகு வீழ்ச்சி அடைய வேண்டிய காய்கறி விலை மலையாக உயர்ந்துள்ளது. 'இலங்கையில் இந்திய இராணுவத்தினர் போரிடுகிறார்கள் இங்கே விலைவாசிஏற்றத்துக்கு எதிராக யார் போரிடுவார்கள்?' என்று கேட்டுள்ளது இந்தியன்எக்ஸ்பிரஸ்.



படிப்பகம்

www.padippakam.com

# அரசு மருத்துவமனைகள்

# மனித உயிர் பறிக்கும் பலிபீடங்கள்

ஹெம்மத் ராணடே. 22 வயது இளைஞர். நாக்பூரில் மராட்டிய மின்வாரியத்தில் தட்டச்சாளராக வேலையில் இருந்திருக்க வேண்டியவர். தனக்கு வேலை கிடைத்த மகிழ்ச்சி செய்தியை பம்பாயிலுள்ள தனது சகோதரிக்குத் தெரிவிக்க ஆவலோடு வந்தார். எதிர்பாராதவிதமாக லாரி மோதியதால் படுகாயமுற்று பம்பாய் ஜே. ஜே. அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். உடல் தேறி வந்த அவருக்கு 20வது நாளில் சிறுநீர் வெளியேறுவது நின்று போனது. 28வது நாளில் அவர் திடீரென மரணமடைந்தார். காரணம், அவருக்குத் தொடர்ந்து டைஎத்திலீன் கிளைக்கால் என்ற கொடிய நஞ்சு, மருந்து என்ற பெயரில் செலுத்தப்பட்டு வந்தது. மரணத்திற்குப் பிறகு அவரது சிறுநீரகத்தைப் பரிசோதித்துப் பார்த்ததில் இந்த உண்மை தெரிய வந்தது.

மாண்டு போனது ராணடே மட்டுமல்ல. 10வயது தன்வீர் முதல் 75 வயது தாஹுத் தோலாகியா வரை 14 நோயாளிகள். இதில் ராணடே மட்டுமே படுகாயமுற்றிருந்தவர். மற்றவர்கள் சாதாரண நோய்க்கு சிகிச்சை பெற வந்தவர்கள். அனைவருமே உழைக்கும் வர்க்கத்தினர். கீழ்மட்ட நடுத்தர குடும்பத்தினர். பம்பாயைச் சுற்றியுள்ள புறநகர் பகுதியில் குடியிருப்பவர்கள் அல்லது அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள். நகரத்துக்குப் போனால் நல்ல வைத்தியம் கிடைக்கும் என்று நம்பித்தான் வந்தார்கள். ஆனால் அரசு மருத்துவமனை நரகமாக இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ஏதோ, போகிற வயதுதான். ஆனால் இப்படி ஆகுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை என்று மாண்டவர்களின் உறவினர்கள் சமாதானம் அடைந்து விடக்கூடிய சாதாரண விவகாரமாக இதைக் கருதிவிட முடியாது. மனித உயிரோடு விளையாடிய மருந்து உற்பத்தியாளர்கள்— அதிகாரவர்க்கம்-ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளின் கூட்டுக் கொள்ளைதான் இந்த அப்பாவிகளின் மரணத்துக்குக் காரணம். 14 நோயாளிகள் பலியான பிறகு அவர்களது உறவினர்களின் வாழ்நிலையே தலைகீழாக மாறிப் போய்விட்டது. அவர்கள் வறுமையின் கோரப்பிடிக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.



"அரசு மருத்துவமனைகள்மீது எங்களுக்கு நம்பிக்கையே இல்லை. ஆனால் எங்களுக்கு வேறு வழியில்லை. ஏனென்றால் நாங்கள் ஏழைகள்'' என்று கலப்பட மருந்தினால் இறந்துபோன தனது மாமாவின் மறைவை எண்ணி ஆத்திரத்தோடு கூறுகிறார் பிரமீளா தேசாய்.

"சாதாரண கண்புறை நோய்க்கு அறுவை சிகிச்சை செய்யப் போன 75 வயது பெரியவர் தாஹுத்தோலாகியாவின் பிணம்தான் விடு திரும்பியது. அவர் மகனோ ஒரு பொறுப்பற்ற குடிகாரன். அவர் மருமகள் காகிதப் பைகள் தயாரித்து நாலு காசு சம்பாதித்து வந்தாள். பெரியவர் தாஹுத் தள்ளாத வயதிலும் உழைத்து தனது மகனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். அவர் மறைந்த பிறகு அக்குடும்பம் நாதியற்றுப் போனது. ஒற்றை அறை கொண்ட வாடகை வீட்டில் வசித்த அக்குடும்பம் இன்று பந்த்ரா சேரிப் பகுதியில் வாழவேண்டிய அவல நிலைமை ஏற்பட்டுள்ளது'' என்று கோபத்தோடு கூறுகிறார் அவர் மருமகன் யூசுப்.

"அரசு மருத்துவமனைகள் மீது எங்களுக்கு நம்பிக்கையே இல்லை. ஆனால் எங்களுக்கு வேறு வழியில்லை. ஏனென்றால் நாங்கள் ஏழைகள்'' என்று மாண்டுபோன தனது மாமாவின் மறைவை எண்ணி ஆத்திரத்தோடு கூறுகிறார் பிரமீளா தேசாய்.

பம்பாயிலுள்ள ஜே. ஜே. அரசு மருத்துவமனையில் 1986 ஜனவரியில் ஒரே நாளில் 14 நோயாளிகள் மாண்டதும் ஆத்திரமுற்று பொது மக்கள் நடத்திய போராட்டத்திற்குப் பிறகு பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி லெண்டின் தலைமையில் விசாரணைக் கமிஷன் நிறுவப்பட்டது. மரணத்திற்குக் காரணமான மருந்து, ஆலைகளில் பயன்படுத்தக் கூடிய டை எத்திலீன் கிளைக்கால் என்னும் இரசாயனப் பொருள் என்பது விசாரணையில் தெரிய வந்தது. கலப்படம் செய்த மருந்து மட்டும் காரணமில்லை; மருத்துவர்கள், அதிகாரிகள், மந்திரிகள், மருந்துக் கம்பெனிகளின் கூட்டுச் சதியே—லாப வெறியே இக்கொலைகளுக்குக் காரணம் என்பதை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியுள்ளார் நீதிபதி லெண்டின்.

அல்பானா—பார்மா என்ற மருந்து கம்பெனி சப்ளை செய்த கலப்படம் செய்யப்பட்ட மருந்தை நோயாளிகளுக்கு செலுத்தியதில் ஜனவரி 21லிருந்து 25க்குள் ஏழு பேர் மாண்டனர். அதன் பிறகும்



படிப்பகம்

www.padippakam.com

கூட மருத்துவர்கள் அந்த மருந்தை நிறுத்தி வைக்காமல் மேலும் ஒரு வாரத்திற்கு நோயாளிகளுக்குச் செலுத்தியுள்ளனர். இதனால் சாவு எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது. 35 பேர் மரணத்தின் விளிம்புவரை சென்று எப்படியோ உயிர் பிழைத்துள்ளனர்.

உயிருக்கே ஆபத்தான மருந்து என்று அறிந்தும்கூட நஞ்சாகிப் போன மருந்தை தொடர்ந்து நோயாளிகளுக்கு செலுத்திய மருத்துவமனை நிர்வாகம்குற்றவாளியா?

ஜே. ஜே. அரசு மருத்துவ மனைக்கு கலப்படம் செய்யப்பட்ட கிளிசரின் மருந்தை சப்ளை செய்தும், தில்லுமுல்லுகள் மூலம் டெண்டர்களைப் பெறுவதில் முதலிடம் வகிக்கும் அல்பனா-பார்மா என்ற மருந்துக் கம்பெனி குற்றவாளியா?

அல்லது, உயிர்கொல்லி மருந்தை உற்பத்தி செய்த அல்பனா-பார்மா மருந்துக் கம்பெனியைப் போல நாற்றுக்கணக்கான கலப்பட மருந்துக் கம்பெனிகளுக்கு உரிமம் வழங்கிய மருந்து நிர்வாகத்துறை குற்றவாளியா?

அல்லது, உயிர் கொல்லி மருந்து நிறுவனங்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு, மருந்து நிர்வாகத்துறை அதிகாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து மோசடி மருந்துக் கம்பெனிகளுக்கு உரிமமும், சலுகையும், மானியமும் வழங்கிய மந்திரிகள் குற்றவாளிகளா?

"என்னைப் பொருத்தவரை இவர்கள் அனைவருமே குற்றவாளிகள்தான். ரஷ்யாவில் சர்வாதிகாரி ஜார் ஆட்சியில்கூட இத்தகைய குற்றவாளிகளை சைபீரியாவுக்கு நாடு கடத்தும் தண்டனை உண்டு. ஆனால் நாமோ விசாரணைக கமிஷன் நடத்திக் கொண்டிருக்கிறோம்" என்று விரக்தியோடு கூறுகிறார் நீதிபதி லெண்டின்.

இத்தகைய குற்றம் புரிந்தவர்களுக்கு விளக்கம்கோரும் நோட்டீசு அனுப்ப வேண்டும் அல்லது உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தவேண்டும்என்பதையே அதிகபட்ச தண்டனையாக முன் வைக்கிறது இந்திய அரசு. அப்புறம் கேட்கவாவேண்டும்? தரங்குறைந்த—கலப்பட மருந்து உற்பத்தியாளர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் கொண்டாட்டம் தான்.

இப்படி சாவு வியாபரிகளுக்கு கைமாறு செய்து கையூட்டு பெற்று தனது குடும்பத்தையே மருந்து உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்தி பெரிய கம்பெனிகளின் பங்குகளை வாங்குமளவுக்கு மருந்து நிர்வாகத்துறை இயக்குனர் டோலாஸ் முன்னேறி விட்டார். மராட்டிய சுகாதார மந்திரிகளாயிருந்த சாவந்த், ஹிரே மட்டுமல்ல, ஐந்து முன்னாள் மந்திரிகள், முன்னாள் முதலவர்கள் அந்துலே, சிவாஜிராவ் பட்டீல் முதலானோரும் போலியான அறக்கட்டளைகள் நிறுவி மருந்து உற்பத்தியாளர்களிடம் கோடிக்கணக்கில் 'நன்கொடை' திரட்டியுள்ளனர்.



"எனது மைத்துனரான அப்துல்காதர் விஷ மருந்தினால் மாண்ட பிறகு அவரது இருமகன்களையும் சிறிய அறையாக உள்ள எனது வீட்டில் எனது மூன்று மகன்களுடன் சேர்த்து பராமரித்து வருகிறேன். அவர்களும் வேலை கிடைக்காமல் தவிக்கின்றனர். நாங்கள் எப்படி வாழ்வது என்றே தெரியவில்லை" என்று வேதனைப்படுகிறார் ருகியா முகம்மது.

● அல்பனா—பர்மா என்ற மருந்துக் கம்பெனியைத் தவிர 250க்கும் மேற்பட்ட மருந்துக் கம்பெனிகளிடம் பரிசோதனைச் சாலைகளே இல்லை. ஆனாலும் அவை தொடர்ந்து மருந்து உற்பத்தி செய்கின்றன.

● 1985ம் ஆண்டு ஜனவரியிலிருந்து செப்டம்பர் முடிய விற்பனை செய்யப்பட்டுள்ள 582 வகை மருந்துக் கலவைகள் தரங்குறைந்தவை என்று உணவு மற்றும் மருந்துப் பொருள் நிர்வாகத் துறையால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதில் 119 கலவைகள் உயிர்காக்கும் மருந்துகளாகும். இவையனைத்தும் பிரபலமான பெரிய மருந்து நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்டவை. ஆனாலும் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

● மருந்து உற்பத்தியாளர்களான சாவு வியாபாரிகள்—அதிகார வர்க்கம்—ஓட்டுக் கட்சி அரசியல் வாதிகளின் கூட்டுச் சதியை விசாரணைக் கமிஷன் தோலுரித்துக் காட்டிய போதிலும், இவற்றுக்கு தார்மீக பொறுப்பேற்க வேண்டிய சுகாதார மந்திரி பாய் சாவந்த் இன்னமும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்.

மொத்தத்தில் 17 மாத காலமாக சிரமப்பட்டு உண்மைகளைக் கண்டறிந்து கமிஷன் கொடுத்த அறிக்கையை மராட்டிய அரசு குப்பைக் கூடையில் வீசிவிட்டது. குற்றவாளிகள் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. "காலத்தையும் அரசு நிதியையும் வீணடித்ததைத் தவிர கமிஷனால் வேறு எந்த விளைவும் ஏற்படவில்லை" என்று விரக்தியோடு கூறுகிறார் நீதிபதி லெண்டின்.

இந்தியா முழுவதுமுள்ள அரசு மருத்துவமனைகளின் லட்சணத்திற்கு பம்பாய் ஜே. ஜே. அரசு மருத்துவமனை, பானைசோற்றைப் பதம் பார்த்த ஒரு சோறுதான். மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பிரசவம் பார்க்கும் மருத்துவமனைகள், குளுக்கோஸ் திரவத்திற்குப் பதிலாக வெறுந்தண்ணீரை நோயாளிக்குச் செலுத்தும் மருத்துவமனைகள் என்று கணக்கேயில்லாமல் சாவு வியாபாரிகளின் லாப வெறிக்கு மனித உயிர் பறிக்கும் பலிபீடங்கள் நாடெங்கும் விரவியுள்ளன.

அடிப்படை வசதிகளை அறவே புறக்கணித்து விட்டு பன்னாட்டு பகாசுர மருந்துக் கம்பெனிகளின் கொள்ளைக்கு சாமரம் வீசிக் கொண்டிருக்கும் பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சியில் இக்குற்றவாளிகள் ஒருவேளை தண்டனையிலிருந்து தப்பிவிடலாம். ஆனால் இந்நாட்டு மக்கள் ஒரு புரட்சியில் இறங்கும் போது, இக்குற்றவாளிகளை மக்கள் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிப்பார்கள். அவர்களின் கொலை பாதகச் செயலுக்குத் தண்டனையாக அவர்கள் கொடிய நஞ்சை அருந்த நிர்பந்திக்கப் படுவார்கள்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# நடப்பது அரசியல் விபச்சாரம்—அதில் கண்ணியம்தான் குறைச்சலா?

தமிழ் வாசகர்களில் பெரும்பான்மையோர்—படிப்பாளிகள், தங்களை அறிவாளிகள் என்று கருதிக் கொள்ளும் நடுத்தரங்கள்—படிக்கும் பத்திரிக்கைகளான குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, துக்ளக், ஆகியவற்றில் கடந்த மாதம் வெளிவந்த கேலிச் சித்திரங்களை இங்கே பிரசுரிக்கிறோம். நடுநிலை வழுவாத தேசியப் பத்திரிக்கைகளாகக் கூறிக் கொள்ளும் இவை கேலிக்காக மட்டுமல்ல ஒரு பிரச்சாரத்துக்காகவும் இந்த கருத்துப் படங்களைப் போட்டுள்ளன.

எம்ஜிஆர் சாவுக்குப் பிறகு, அந்த பாசிச, குரூர, கோமாளியை உலகிலேயே ஈடு இணையற்ற உத்தமனும் மனிதாபிமானியும் என்று அவை எழுதின. எம்ஜிஆரின் கட்சி உடைந்து விடக் கூடாது. அது கருணாநிதிக்கு சாதகமாக, இந்திய—இலங்கை ஒப்பந்தத்துக்கும், தேசியத்துக்கும் பாதகமாக அமைந்து விடும் என்று எம்ஜிஆர் கட்சியினரை வேண்டிக் கொண்டன. எம்ஜிஆர் கட்சி இரண்டு கும்பல்களாக உடைந்த பிறகு குமுதமும் துக்ளக்கும் வீரப்பன் கும்பலை ஆதரித்தும், விகடனும் கல்கியும் ஜெயலலிதாவை ஆதரித்தும் எழுதின. எம்ஜிஆர் கட்சியின் சக்களத்திச் சண்டை குழாயடி வசவுகளாக மாறின.

பதறிப் போய்விட்டன அந்தப் பத்திரிக்கைகள். "நடுநிலை" ஏடுகள் அல்லவா? ● 3 ஆண்டுகளாக எம்ஜிஆர் நடைப்பிணமாகவே வாழ்ந்தார். அதை,அவரை வைத்துக் கொண்டு நாட்டு மக்களை மோசடி செய்திருக்கிறார்கள். ● எம்ஜிஆரின் பத்தாண்டு ஆட்சியில் லஞ்ச ஊழல்கள், அதிகார முறைகேடுகள் ஏராளமாக நடந்துள்ளன. கட்சிகாரர்கள், அதிகாரிகள், அமைச்சர்கள், கவர்னர் அனைவருமே சம்பந்தப்பட்டிருக்கின்றனர். ● எம்ஜிஆருக்குத் தெரிந்தே நடந்திருக்கிறது. லஞ்ச ஊழலுக்கும் அதிகார முறைகேடுகளுக்கும் உடந்தையாக இருந்த எம்ஜிஆரே அவற்றில் ஈடுபட்டுள்ளார். 100 கோடி ரூபாய்க்கு மேலே சொத்துச் சேர்த்துள்ளார் அந்த "வள்ளல்." ● கட்சிக்காரர்களை எம்ஜிஆர் ஆள் வைத்து அடிப்பது, மிரட்டுவது, இரகசியமாக "டேப்" பதிவு செய்து மிரட்டுவது, ஜெயலலிதாவுடன் கள்ள உறவு மற்றும் சந்தேகப் பிராணியாக இருந்தது, கீழ்த்தரமான—வக்கிரமான முறைகளில் கட்சி, ஆட்சி, வாழ்க்கை நடத்தியது.

—இப்படி மனிதாபிமானி நேர்மையாளர்—புனிதர், வள்ளல், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், செத்த பின் "பாரத ரத்னா" என்று போற்றப்பட்டவரின் யோக்கியதை வீரப்பன்,ஜெயலலிதா நடத்தும் தெரு நாய்ச் சண்டையிலே தெரிய வருகிறது. எம்ஜிஆரின் யோக்கியதை நாறுகிறதே என்பது மட்டுமல்ல, ஓட்டுக் கட்சி அரசியலில் ஊழல் செய்யாதவன் எவனுமில்லை என்பதை மக்கள் அறிந்து கொண்டால் என்ன செய்வது? அதற்கும் அவர்களே வாக்குமூலம் கொடுத்தால் எப்படி? எனவேதான் பதறிப் போய்விட்டன "நடுநிலை—தேசியங்கள்" கண்ணியமாக நடந்துகொள்ளும்படி குழாயடிச் சண்டையில் ஈடுபட்டுள்ள அரசியல் விபச்சாரிகளிடம் கோருகின்றன. அரசியல் தரம் குறைகிறதே என்று அங்கலாய்க்கின்றன.

ஜானகிக்குப் பின்னே ஒரு சாராயு உடையாரும், ஜெயலலிதாவுக்குப் பின்னே சாந்திலால் மேத்தாவும் கருப்புப் பணத்தை வீசி அரசியல் விபச்சாரத்தை மும்முரமாக நடத்தலாம். ஆனால் கண்ணியமாக நடக்க வேண்டும் என்றால் முடியுமா?







குமுதம்




படிப்பகம்

www.padippakam.com




கல்கி





துக்ளக்





ஆ.விகடன்




படிப்பகம்

www.padippakam.com

## பாலஸ்தீனம்:

# குமுறும் எரிமலை

"பாலஸ்தீனியர்களின் போராட்டம் இன்னும் ஒரு தலைமுறைக்கு மட்டுமே நினைவிருக்கும். அதன்பிறகு அது வழக்கொழிந்துபோன விவகாரமாகி விடும்" என்று 1959ல் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜான் பாஸ்டர் எள்ளி நகையாடினார். ஆனால் நான்கு தலைமுறைக்கும் மேலாக விடாப்பிடியாக தொடர்ந்து வரும் பாலஸ்தீனியர்களின் போராட்டம் கடந்த இரு மாதங்களாக வீறுகொண்டு எழுகிறது.

சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பாலஸ்தீனியர்கள் அகதிகளாக அரபு நாடுகளில் முகாமிட்டுக் கொண்டு தொடுக்கும் தாக்குதல்களால் இஸ்ரேலிய ஆக்ரமிப்பாளர்கள் நிலைகுலைந்த நிகழ்ச்சிகள் ஏராளம். இன்று இஸ்ரேலிய யூத இனவெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலிருந்தே பாலஸ்தீனியர்கள் தங்கள் உரிமைக்காக கிளர்ந்தெழுகிறார்கள்.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டு சொந்த நாட்டிலேயே—காசா முனையிலும், மேலைக்கரை பகுதியிலும் அகதிகளாக முகாம்களில் அடைபட்டு வாழும் பாலஸ்தீனியர்கள் வெஞ்சினத்தை நெஞ்சில் தேக்கி நீறுபூத்த நெருப்பாக இருந்தார்கள். டிசம்பர் 8ந் தேதியன்று காசான் மக்கள் நால்வர்மீது ஒரு இஸ்ரேலியர் லாரி ஏற்றிக் கொன்றதையடுத்து போராட்டம் பெரு நெருப்பாக பற்றிப் படர்ந்தது. அகதிகள் முகாம்கள் போர்க் கோலம் பூண்டன. நிராயுதபாணியான பாலஸ்தீனிய மக்கள் கோபம் கொப்பளிக்க ஆர்த்தெழுந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அஞ்ஞானவாத அரபு நாடுகள் மத்தியில் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் ஒரே நாடு இஸ்ரேல்தான் என்று பீற்றிக் கொள்ளும்யூத இனவெறியர்கள் பாலஸ்தீனர்களின் நியாயமான போராட்டத்தை சகித்துக் கொள்ளக்கூட தயாராகஇல்லை. எதிரி நாட்டின்மீது படையெடுப்பது போல அதிரடிப் படையிலிருந்து, பீரங்கிகளையும் டாங்கிகளையும் கொண்டு போய் குவித்து பாலஸ்தீனிய மக்கள்மீது கொலை வெறியாட்டத்தைத் தொடர்ந்தார்கள்.

ஆயிரக்கணக்கில் கைது, சித்திரவதை, ஊரடங்கு, கண்டதும்சுட உத்திரவு என்று அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

அஞ்சி நடுங்கவில்லை பாலஸ்தீனிய மக்கள். அறுபது வயது மூதாட்டி முதல் ஆறுவயது சிறுவன் வரை இரு விரல்களை விரித்துக் காட்டி வெற்றி எமதே என முழக்கமிட்டுக் கொண்டு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தார்கள். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் ராணுவக் கவச வண்டிகளை மறித்து நின்று போராடினார்கள்.

மேற்கு ஆசியாவின் பேட்டை ரௌடியாகத் திகழும் இஸ்ரேலிய கூலிப்படை கிஞ்சித்தும் மனிதாபிமானமற்று குழந்தைகள்மீது குண்டு வீசியது. பாலஸ்தீனிய குடியிருப்புகளைச் சூறையாடி, வீடுகளை தரைமட்டமாக்கி உடமைகளைத் தீயிட்டுக் கொளுத்தியது. கடந்த இருமாதங்களில் நூற்றுக்கணக்கானோரைச் சுட்டுக்கொன்றும்ஆயிரக்கணக்கானோரைப்படுகாயப்படுத்தியும் இஸ்ரேலிய கூலிப்படை பயபீதியூட்டிய போதிலும்கூட துவண்டு விடாமல் பாலஸ்தீனிய மக்கள் தொடர்ந்து விடாப்பிடியாக வீதிகளிலே வீரப் போர் புரிகிறார்கள்.

"எங்களது பாரம்பரியமான நியாயமான உரிமையை நிலைநாட்டவே . நாங்கள் போராடுகிறோம். துப்பாக்கித் தோட்டாக்களைக் கொண்டு எங்கள் உணர்வு



அல்—ரன் அகதிகள் குடியிருப்பு பகுதியில் இஸ்ரேலிய கூலிப் படைகள் நடத்திய வெறியாட்டம். துப்பாக்கிக் குண்டுகளுக்கு எதிராக வீரமும் கற்களும்தான் எங்கள் ஆயுதங்கள் என்று சாலை மறியலில் ஈடுபடும் பாலஸ்தீனியர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

கனை அடக்கிவிட முடியாது. இலட்சியப்பற்றும் வீரமும் உள்ள வரை, கற்களும் தடிகளையும் கொண்டே கூட நாங்கள் போரிட்டுக் கொண்டிருப்போம்'' என்று நிராயுதபாணியான பாலஸ்தீனிய மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

காசாமுனை பகுதியிலுள்ள பெய்ட் உம்மார் கிராமத்தில் இஸ்ரேலிய கூலிப்படை திடீரென வந்திறங்கியது. பெரியவர்களிலிருந்து குழந்தைகள்வரை பாலஸ்தீனிய மக்கள் தங்கள் கைகளை இணைத்துக் கொண்டு மனித சங்கிலியாக சுற்றி வளைத்துக் கொண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். நிராயுதபாணியான இம்மக்கள்மீது எவ்வித முன்னறிவிப்புமின்றி இஸ்ரேலிய ராணுவம் கண்முன் தெரியாமல் சுட்டது. தங்கள் சகோதரர்கள் 11 பேர் தங்கள் கண்ணெதிரே மாண்டபோதும் அவர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்தவில்லை. அகதிகள் முகாம்களிலிருந்துஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் வரை தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டம் நீடிக்கிறது.

ஆக்கிரமிப்புக்குள்ளான கோலான் குன்றுகள் பகுதியில் பாலஸ்தீனிய மக்களிடம் அடையாள அட்டை கேட்டு இஸ்ரேலிய கூலிப்படை துன்புறுத்தியதைத் தொடர்ந்து, கடந்த ஒருமாத காலத்தில் சற்றே தணிந்திருந்த போராட்டம் மீண்டும் பேரலையாய் சீறியது. 'தென்னாப்பிரிக்க நிறவெறி அரசின் பங்காளிதான் இஸ்ரேலிய யூதவெறி அரசு என்பதை உலக மக்களுக்கு இச்சம்பவம் நிரூபித்துக் காட்டிவிட்டது' என்று கூறுகிறார் ஒரு பாலஸ்தீனப் போராளி. வெகுஜன இயக்கங்கள் இவ்வாறு தொடர்ந்து கொண்டிருக்கும்போதே மறுபுறம் சில பாலஸ்தீனிய போராளிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை அரங்கேற்றி இஸ்ரேலிய கூலிப் படைகளுக்குப் பீதியூட்டி வருகிறார்கள்.

'தென்னாப்பிரிக்க நிறவெறி சர்வாதிகாரிகள் நமீபியாவை ஆக்கிரமித்துக் கொண்டு அடக்கியொடுக்குவது போல இஸ்ரேலிய காட்டுமிராண்டிகள் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அடக்குகிறார்கள்; உலகில் மனித உரிமை பறிக்கும் நாடுகளில் இஸ்ரேல் முதலிடம் வகிக்கிறது' என்று ஐ.நா. சபையில் கூட்டுச்சேரா நாடுகள் கண்டனம் தெரிவித்தன. வழக்கமாக தனது அடிவருடியான இஸ்ரேலுக்கு ஆதரவாக நிற்கும் அமெரிக்கா முதன் முறையாக எதிராக வாக்களித்தது. அந்த அளவுக்கு இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனம் நியாயப்படுத்த முடியாமல் அம்பலப்பட்டுப் போயுள்ளது. இஸ்ரேலைத் தொடர்ந்து ஆதரித்தால் எங்கே அரபு நாடுகள்மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியாமல் போய்விடுமோ என்றஞ்சியே அமெரிக்கா இப்படி திறமையாக நாடகமாடியது.

பாலஸ்தீனியர் மீதான சமீபத்திய தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய ஆளும் கூட்டணியே பிளவுபட்டுப் போயுள்ளது. யூத மதவெறியாட்டத்தை எதிர்த்து ஆளும் கூட்டணியிலுள்ள உழைப்பாளர் கட்சி கடும்எச்சரிக்கை விடுக்கிறது. அக்கட்சியின் தலைவரும், கூட்டணி அரசின் வெளியுறவு அமைச்சருமான ஷிமான் பெரோஸ், பாலஸ்தீனியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தக் கோருகிறார். முன்னாள் அமைச்சர் அபா ஏபன் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை இஸ்ரேல் விடுவிக்கக் கோருகிறார். ஷமீரின் சர்வாதிகார ஆட்சியால் இஸ்ரேல் உலக மக்களிடம் தனிமைப் பட்டுவிட்டதாக பிற கூட்டணி கட்சிகள் அங்கலாய்க்கின்றன.



நிச்சயமற்ற வாழ்க்கை தொடரத்தான் செய்கிறது. ஆனாலும் பழகிப்போன போராட்ட வாழ்க்கை. அவலங்களுக்கு மத்தியிலும் பாலஸ்தீனியர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள்.

அமெரிக்க எஜமானரும், இஸ்ரேலிய ஓட்டுக் கட்சிகளும் திடீரென பாலஸ்தீனியர்கள்மீது கரிசனம் கொண்டு கண்டனம் தெரிவிப்பதற்கு காரணம் இல்லாமலில்லை. உலகமக்கள் முன் தனது அடாவடித்தனத்தால் அம்பலப் பட்டு போயிருக்கும் அமெரிக்காவும் இஸ்ரேலும் விரைவில் பொதுத் தேர்தலை சந்திக்க உள்ளன. எனவேதான், மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட முயலும் தேவதூதனாக அரிதாரம் பூசிக் கொண்டு ரீகன் கும்பலும், இஸ்ரேலிய தேர்தலில் ஷமீரின் லிக்குட் கட்சியை வீழ்த்தும் நோக்கத்தோடு பிற ஓட்டுக் கட்சிகளும் பாலஸ்தீனியர்கள் மீது திடீர் கரிசனத்தைப் பொழிகின்றன. அமெரிக்காவின் நோக்கத்தை நிறைவேற்ற எடுபிடி எகிப்திய அதிபர் முபாரக்,பாலஸ்தீனிய விடுதலைஸ்தாபனத்தை (PLO) பாலஸ்தீனிய மக்களின் ஏகப்பிரதிநிதியாக அங்கீகரித்து, சர்வதேச மாநாடு நடத்தி அமைதியான முறையில் தீர்வு காணலாம் என்ற திட்டத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கும் அரபு நாடுகளுக்குஇறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறார்.

பாலஸ்தீனிய விடுதலை ஸ்தாபனத்தில் உள்ள பிளவையும் மோதலையும் பயன்படுத்திக் கொண்டு அதன் ஊசலாட்டத் தலைவர் யாசிர் அராபத்தை பணிய வைத்து சமரச திட்டத்தை அரங்கேற்றிவிட அமெரிக்காவும், அதன் அடிவருடி அரபு நாடுகளும் துடிக்கின்றன. உரிமைக்காகத் தொடர்ந்து போராடிவரும் பாலஸ்தீனிய மக்களும் போராளிகளும் இத்தகைய கபட வேடதாரிகளையும் துரோகிகளையும் இனங்கண்டு முறியடிக்க வேண்டும். அரபு மக்களின் விடுதலையோடு தங்கள் விடுதலைப் போரை இணைக்க வேண்டும். புரட்சிகர சித்தாந்தத்தால் வழிநடத்தப்படும் சரியான அமைப்பை நிறுவி, அரபு மக்களுடன் ஐக்கியப்பட்டு பாலஸ்தீன புரட்சியைத் தொடர வேண்டும். இத்தகைய சரியான பாதையிலே, பாலஸ்தீன மக்களின் கனவை நனவாக்கும் புரட்சி நிச்சயம் வெற்றி பெறும்.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# வீறுகொண்டு எழுகின்றன போராட்டங்கள்!

நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாத கோழைகளான அரசர்கள் — ஆட்சியாளர்களிடம் அதிகாரம் குவிந்திருந்தாலும் என்ன செய்வார்கள் தெரியுமா? நாட்டில் ஆங்காங்கே கலகங்களும், கிளர்ச்சிகளும் வெடித்து மக்கள் கொதித்தெழுந்தால் கொடுங்கோலர்கள் என்று பெயரெடுத்த அமைச்சர்களிடமும், தளபதிகளிடமும் "பொறுப்புக்களை" ஒப்படைத்து விட்டு அந்தப்புரத்துக்குள் போய் புகுந்து கொள்வார்கள் அல்லது வசந்த கால அரண்மனைகளில் ஓய்வெடுக்க ஓடி விடுவார்கள்; மிதமிஞ்சிய போதை, ஆபாச களிவெறியாட்டங்கள், ஆடம்பரமான விருந்துகளில் மூழ்கிப் போவார்கள். இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆளவந்துள்ள இளவரசர் ராஜீவும் இதற்கு விதிவிலக்கல்ல.

நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கிளர்ச்சிகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. நெருக்கடிகள் முற்றிக் கொண்டிருக்கின்றன. மிதமிஞ்சிய போதை, ஆடம்பர விழா—விருந்து களிவெறியாட்டங்களைத் தேடி அந்தமானுக்கும், லட்சத் தீவுகளுக்கும், அமெரிக்கா, ருஷ்யாவுக்கும் பறக்கிறார், இளவரசர் ராஜீவ்.

● 35 கோரிக்கைகளை முன்வைத்து லட்சக்கணக்கான நடுத்தர பணக்கார விவசாயிகள் மீரட் நகரில் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஜனவரி 27ந் தேதியிலிருந்து மத்திய இராணுவ மைதானத்தில் காலவரையறையற்ற மறியலில் மனைவி-மக்கள்—சமையல்பொருட்களுடன்வந்து முகாமிட்டுவிட்டனர் —ஈடுபட்டுள்ளனர். மண்டலக்கமிஷனர் அலுவலகத்தின் மீது முற்றுகைப் போராட்டம் நடத்துகின்றனர். தேசியப் பாதுகாப்பு சட்டத்தை ஏவித் தலைவர்களைக் கைது செய்வது, போலீசை ஏவி விவசாயிகளை அடக்கி ஒடுக்குவது ஆகிய எந்த மிரட்டலுக்கும் அவர்கள் பணியவில்லை. மத்திய—மாநில மந்திரிகள் அதிகாரிகளின் போலி வாக்குறுதிகள், பேரங்களுக்கும், அவர்கள் மசியவில்லை. அரசு நிர்வாகத்தைப் புறக்கணிப்பது, வரிகொடா இயக்கம், சாலை—ரயில் மறியல் ஆகியவற்றில் இறங்கப் போவதாக எச்சரிக்கின்றனர்.

● தனி மாநிலம் கோரி போராடத் துவங்கிய கூர்க்கா தேசிய விடுதலைமுன்னணி டார்ஜிலிங் மலைப் பகுதி முழுக்கவும் 40 நாட்கள் பொது கடையடைப்பு (அர்த்தால்-பந்த்)துவங்கி நடத்துகிறது. இருந்த ஒரே பாலத்துக்கும் வெடி வைத்துத் தகர்த்து சிக்கிம் மாநிலத்துடனான தொடர்பையே துண்டித்து விட்டார்கள். மலைப்பகுதி நகரங்களின் குடிதண்ணீர்—மின்சார இலக்குகளையும் மாவட்ட நீதிமன்றம், உளவுபடைத் தலைமையகம் போன்ற அரசு கட்டிடங்களையும் குண்டு வைத்துத் தகர்க்கிறார்கள். ரோந்து சுற்றும் போலீசாரையும், முன்னணியினரைத் தேடிப் பிடிக்க சோதனையிடும் போலீசாரையும் தாக்கி அழித்தொழிக்கின்றனர். பூடாசிங்—ஜோதிபாசுவுடன் பேரம் பேசி மாவட்டக் கவுன்சில் அமைப்புக்கு ஒப்புக்கொண்ட முன்னணி கூடுதலான அதிகாரங்களும், பகுதிகளும் கோரி தொடர்ந்து போராடுகிறது.

● ஜனவரி 21ந் தேதியிலிருந்து டெல்லி உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். புதுடில்லி துணை போலீஸ் கமிஷனர் கிரண்பேடியைத் தற்காலிக வேலை நீக்கம் செய்யக் கோருகின்றனர். டெல்லி கல்லூரி விடுதியில் திருடிவிட்டதாக ஒரு இளம் வழக்கறிஞரைக் கைது செய்து விலங்கு மாட்டி நீதிமன்றத்துக்கு போலீசார் இழுத்து வந்தனர். அவர் நிரபராதி என்று விடுவிக்கப்பட்டார். பயங்கரமான, தப்பி ஓடும் அபாயம் உள்ள குற்றவாளி தவிர யாருக்கும் விலங்கிடக் கூடாது. எனவே அந்த நீதிமன்ற வழக்கறிஞர்கள் சிலர் போலீஸ் அதிகாரியிடம் முறையிடப் போனார்கள். ஆனால் அவர்களை வெளியே பிடித்துத் தள்ளியதுடன் போலீசுப் படையை ஏவித் தடியடி நடத்தி, ஆபாசமாக விரட்டப்பட்டனர். எனவே அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காலவரையறையன்றி வக்கீல்கள் போராடுகின்றனர். பிப்ரவரி 8ந்தேதி நாடு முழுவதுமிருந்த வக்கீல்கள் ஆதரவு வேலை நிறுத்தம் செய்தனர். வக்கீல்களைப் பிளவுபடுத்த முயன்றும், பெண் போலீஸ் அதிகாரிக்கு ஆதரவாக வெளியுறவுத் துறை—ரயில்வே—




விவசாயிகளுடன் பேசிக் கொண்டிருக்கும் மகேந்திரசிங் திக்கய்த்.

படிப்பகம்

ராணுவ அதிகாரிகளின் மனைவிமார் சங்கங்களின் ஆர்ப்பாட்டம் நடத்தியும் வக்கீல்கள் பின்வாங்கவில்லை.

கடந்த ஒரு மாதமாகத் தொடர்ந்து நடந்து வரும் முக்கிய போராட்டங்கள் இவை. ஆயுதந்தாங்கிய கூர்க்கா விடுதலை முன்னணியினர் நிராயுதபாணிகளான விவசாயிகள், கறைபடியாத கருப்பு வெள்ளைச் சட்டை வக்கீல்கள்—இவர்களை பாசிச ராஜீவ் கும்பல் எப்படிச் சமாளித்தது தெரியுமா? மத்திய ரிசர்வ போலீஸ் படை (சி. ஆர். பி) மற்றும் எல்லைப் பாதுகாப்புப்படை (பி. எஸ். எஃப்) ஆகிய துணை இராணுவத்தை ஏவிவிட்டது. இது தான் நிலைமை. நாட்டின் பல இடங்களிலும் வெடிக்கும் அரசியல் ரீதியிலான, வர்க்க-இன ரீதியிலான வகுப்புவாத கிளர்ச்சிகளை உள்ளூர் போலீசைக் கொண்டு இனிமேலும் சமாளிக்க முடியாது. மத்திய அரசின் துணை ராணுவம் தேவைப்படுகிறது. கிளர்ச்சிகள்—நெருக்கடிகள் நாளும் அதிகரித்து வருவதால் ஏற்கனவே ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய் தின்று ஏப்பம் விடும் 3 லட்சம் பேர் கொண்ட துணை ராணுவமும் போதவில்லை. எனவே 1991க்குள் அதை நாலரை லட்சமாகப் பெருக்குவது என்று பாசிச ராஜீவ் கும்பல் முடிவு செய்துள்ளது. அதுவும் போதாது என்கிற அளவு நிலைமைகள் முற்றி வருகின்றன.

பாசிச இந்திராவின் ஆட்சியிலிருந்து வெவ்வேறு காரணங்களுக்காக துணை ராணுவப் படைகள் பன்மடங்கு பெருக்கப்பட்டன. ஆனால் அவை இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கின்றன தெரியுமா?




1 பி. எஸ். எஃப் 2 சி. ஆர். பி. எஃப் 3 அசாம்படை
4 இந்தோ— திபேத் படை
5 மற்றவை — மத்திய தொழில் பாதுகாப்புப்படை
ரெயில்வே பாதுகாப்புப்படை தேசிய காவற்படை ஆகியன.

# விரிவடைகிறது அடக்குமுறை எந்திரம்!

போலீஸ் அதிகாரி கிரண் பேடியின் அலுவலகத்துக்குள் நுழைய முயலும் வக்கீல்களை மறித்து விரட்டுகிறது சி. ஆர். பி.



● அவசரத் தேவைக்கான சேமிப்பு (ரிசர்வ்) படையாக உருவானது, மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சி. ஆர். பி) இதன் 498 கம்பெனிகளில் (ஒவ்வொன்றும் 100—150 பேர் கொண்டது)பஞ்சாப் மற்றும் சண்டிகாரில் மட்டும் 224 கம்பெனிகள் உள்ளன. டெல்லியில் 89, திரிபுராவில் 30, அருணாசலப் பிரதேசத்தில் 25, மற்ற பிற வடகிழக்கிந்தியாவில் 45, ஈழத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு பெண் போலீஸ் பட்டாளம் உட்பட 13 கம்பெனிகள் உள்ளன. இன்னும் சில ஆந்திராவிலும் குஜராத்திலும் உள்ளன. அவசரத் தேவைக்காக மத்திய அரசிடம் சேமிப்பில் இருக்கவேண்டிய சி. ஆர். பி, மாநிலங்களிலும், ஈழத்திலும் நிரந்தரமாக அடியாள் வேலை பார்க்கப் போய்விட்டது. இப்போது சேமிப்பே கிடையாது.

● 500க்கு அதிகமான கம்பெனிகளைக் கொண்டது எல்லைப் பாதுகாப்புப் படை (பி. எஸ். எஃப்). அதில் 85 பஞ்சாபிலும் 12 டார்ஜிலிங்கிலும், 36 வடகிழக்கிந்தியாவிலும் உள்நாட்டு மக்களை வேட்டையாடும் வேலை செய்கின்றன. மீதி எல்லையில் இருந்தாலும், அவ்வப்போது நாட்டின் பல இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. திட்டப்படி 78 கம்பெனிகள் சேமிப்பில் இருக்க வேண்டும். ஆனால் ஒன்று கூடக் கிடையாது. மேலும் தேவைக்காக காஷ்மீர் எல்லையை ராணுவத்திடம் ஒப்படைத்து விட்டு பி. எஸ். எஃப். உள்நாட்டு வேலைக்கு அனுப்பட்டுள்ளது.

● அசாம் மலைப் பிராந்தியக் காவலுக்காக உருவாக்கப்பட்ட அசாம் துப்பாக்கிப் படை, வடகிழக்கிந்திய போராளிகளை ஒடுக்குகின்றது. இமயமலை எல்லையைக் காப்பதற்கு உருவாக்கப்பட்ட இந்தோ-திபேத் எல்லைப் போலீஸ் படையின் 78 கம்பெனிகள் பஞ்சாபில் வங்கிகளைக் காவல் காக்கின்றன! பாசிச ராஜீவ் கும்பலின் மெய்க்காப்பாளர்களாக இருக்கின்றன! அரசுத் துறை ஆலைகளைக் காவல் காப்பதற்காக உருவாக்கப்பட்ட மத்திய தொழிற்சாலைப் பாதுகாப்புப்படை பஞ்சாபிலும் மேகாலயா, திரிபுரா தேர்தலிலும் போலீஸ் வேலை பார்க்கிறது!

இவை தவிர ரெயில்வே பாதுகாப்புப் படை, தேசிய காவற்படை போன்ற துணை ராணுவப் படைகளும் உள்ளன. எல்லாம் கடந்த ஆறாண்டுகளில் 80 சதவீதம் அதிகரித்தன. ஏற்கனவே 3 லட்சம் பேர், ஆண்டுக்கு ரு. 956 கோடி செலவு. 1991க்குள் 4½ லட்சம் பேர், ஆண்டு செலவு ரு. 1922 கோடி என்று உயரப் போகிறது.

நாட்டில் சட்டபூர்வமான ராணுவ ஆட்சி இல்லையே தவிர உள்நாட்டு யுத்தத்திலுள்ள ராணுவத்தைப் போலவே துணை ராணுவம் ஏவிவிடப்பட்டுள்ளது. “முடிவே காணமுடியாதபடி நீடிக்கிறது என்பதைத் தவிர நாங்கள் ஒரு யுத்தத்தில்தான் இருக்கிறோம்” என்று ஒரு பி. எஸ். எஃப் அதிகாரி கூறியுள்ளார். இராணுவத்துக்கும் இதற்கும் வேறொரு வேறுபாடு



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

என்னவென்றால் நிரந்தர யுத்த களம் கிடையாது. திடீர் திடீரென்று நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குத் தூக்கியடிக்கப் படுகிறார்கள்.

மிஜோரத்தில் போராளிகளை வேட்டையாடப் போன சி. ஆர். பி. எஃப் டெல்லி வந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்துக்குத் துரத்தப்பட்டது. பிறகு டார்ஜிலிங்கிலிருந்து ஒரு பட்டாளம் (13 கம்பெனிகள்) டெல்லிக்கு கொண்டு போகப்பட்டது. அடுத்த நாள் சி. ஆர். பி. எஃப் புறப்பட்டதை கூர்க்கா மக்கள் கொண்டாடியதை ஒடுக்க பஞ்சாபிலிருந்தும், குஜராத்திலிருந்தும் சி. ஆர். பி. எஃப் மற்றும் பி. எஸ். எஃப் படை டார்ஜிலிங் அனுப்பப்பட்டது. அதேபோல் ஆந்திராவில் அதிகாரிகள் பணயக் கைதிகளாகப் பிடிபட்டபோது, டில்லியிடம் சேமிப்புப் படையே இல்லையாம்! பஞ்சாபின் முன்னாள் போலீஸ் உயர் அதிகாரியும், இப்போதைய சீக்கிய தீவிரவாதத் தலைவருமான சிம்ராஞ்ஜித் சிங் மானை பாகல்பூர் சிறையில் காவல் காத்து வந்த 2 கம்பெனி சி. ஆர். பி.எப். அனுப்பப்பட்டது. (இதைத்தான் அதிரடி கமாண்டோப் படை என்று புளுகினர்.)

துணை ராணுவத்தை ஏற்றிச் செல்லுவதற்காக வழக்கமான விமான சேவைகள் திடீர் திடீரென்று பொய்க் காரணங்களைக் கூறி ரத்து செய்யப்படுகின்றன. மந்திரி சிதம்பரம் காய்களை நகர்த்த நகர்த்த கூடுதலான விமானங்கள் பறக்கின்றன. அரசுப் பணம் வானத்தில் வாரி இறைக்கப்படுகிறது. “உலகிலேயே அதிகமாகப் பறக்கும் இராணுவம் இதுதான்” என்கிறார் ஒரு அதிகாரி.

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை துணை மந்திரி சிதம்பரம் இந்திய வரைபடத்தை விரித்து வைத்துக் கொண்டு, யுத்தமுனையில் பட்டாளங்களை நகர்த்துவதைப் போல நகர்த்திக் கொண்டிருக்கிறாராம். பஞ்சாப், குஜராத் டெல்லி, காஷ்மீர், வடகிழக்கிழக்கிந்தியாவின் ஏழு மாநிலங்கள், மேற்கு வங்கம் மற்றும் ஆந்திரா என நாடு முழுக்கவும் வெவ்வேறு பட்டாளங்களைக் குறிக்கும் வண்ண வண்ணக் காய்களை நகர்த்துகிறார் ‘மதியூக மந்திரி.’ ‘ராஜா ராஜீவோ’ ஆடம்பர விருந்து விழாக்களிவெறியாட்டங்களில் மூழ்கிக் கிடக்கிறார்.

“ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு மாநிலத்திலிருந்து படையனுப்பும்படி கோருகிறார்கள். இதற்கு மேலும் எங்களிடம் இல்லை” என்று ஒரு அதிகாரி கையை விரிக்கிறார். “திட்டப்படி இருக்க வேண்டிய சேமிப்புப் படையில்லை. பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பவர்களைக் கூடத் துரத்துகிறார்கள்; பயிற்சி இல்லாத பணிகளுக்கு அறிமுகமில்லாத இடங்களுக்கு அனுப்புகிறார்கள். விதிப்படி கிடைக்க வேண்டிய 60 நாள் விடுமுறை தருவதில்லை. ஓய்வு ஒழிச்சல் கிடையாது; விளைவு களைப்பு, சோர்வு, அதிருப்தி, விட்டு நினைவு, லட்சியப் பிடிப்பு இல்லாதது என்று துணை ராணுவத்தினது தார்மீக உணர்வு கீழே போய்விட்டது” என்று அதிகாரிகள் அலுத்துக் கொள்கிறார்கள்.

துணை ராணுவத்தில் ஒரு கீழ் நிலை அதிகாரி (அவில்தார்) அகமதாபாத் மதக் கலவரத்தின்போது அனுப்பப்பட்டார். விடுமுறையை எதிர்பார்த்து தனது 8 வயது குழந்தைக்கு துணி எடுத்து வைத்திருந்தார். அடுத்த 18 மாதங்கள் விடுமுறை கிடைக்கவில்லை. “எனது மகளுக்கு எடுத்த துணி சிறியதாகி விட்டது. புதிய ஆடை வாங்கிக் கொள்ள அரசாங்கம் ஈட்டுத்தொகை தருமா?” என்று அதிகாரியிடம் கேட்டாராம். அந்த அளவு துணை ராணுவத்தினர் வெறுப்புற்றிருக்கிறார்கள்.

“கனவான்களே, இன்னும் ஒரு நாள் நாம் உயிரோடு இருக்க முடிந்தது. நாளை என்ன நடக்கிறது என்று பார்ப்போம்” என்று அதிகாரிகள் கூட்டத்தில் ஒரு உயர் அதிகாரியே கூறினாராம்.

மக்களை ஒடுக்கவும், நெருக்கடிகளைச் சந்திக்கவும் பாசிச கும்பல் அடக்குமுறைக்கான ஆயுதமாக ராணுவம், துணை ராணுவத்தை ஏவுவதையே செய்கிறது. இதனால் மக்களை ஒடுக்க முடியாது, பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது என்பது மட்டுமல்ல; ஆணைக்குக் கட்டுப்பட மறுப்பதும், அதிகாரிகளைத் தாக்குவதும் சமீப மாதங்களில் அதிகரித்து வருகின்றன என்று ஒப்புக் கொள்கிறார்கள். இம்மாதிரியான சம்பவங்கள் அதிகரித்து கலகங்களாகவும், மக்களுடன் சேர்ந்து பாசிச கும்பலை தூக்கி எறியும் புரட்சியாகவும் கூட மாறும்!

40 நாட்கள் பந்த் நடத்தும் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி.



## கடைசி செய்தி

கடைசியாகக் கிடைத்த தகவலின்படி,
● மீரட்டில் மறியல் - கெரோ நடத்திக் கொண்டிருக்கும் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 5 பேரை சுட்டுக் கொன்றனர். ● டெல்லியில் போராடி வரும் வக்கீல்கள் மீது போலீசுக்கு ஆதரவாக காங்கிரசு குண்டர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ●

படிப்பகம்

www.padippakam.com




# "ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்"

அதிகார எச்சிலுக்காக ஆங்கிலேயக் காலனிய அரசுக்கு ஊழியஞ் செய்த பார்ப்பனக்கும்பலும், பார்ப்பனர்.அல்லாதார் என்கிற பெயரில் நீதித் கட்சி கும்பலும் உருவான வரலாற்றை சுருக்கமாக சென்றஇதழில் பார்த்தோம். ஆனால் "விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்" பற்றி எழுதிய பி. ராமமூர்த்தி மைலாப்பூர்–எழும்பூர் பார்ப்பனக் கும்பல்கள்இருந்ததையும், காங்கிரசு–ஹோம்ரூல் இயக்கங்களிலும் காலனிய அரசுக்கு அவை செய்துவந்த விசுவாச ஊழியங்களை, குறிப்பாக மைலாப்பூர் பார்ப்பனக்கும்பலின் ஆதிக்கத்தையும் எப்படி அடியோடு மூடி மறைத்துவிட முயன்றார் என இனி பார்ப்போம்.

ஆங்கிலேயக் காலனிய ஆதிக்கத்தின் கீழ் நிலவிய தென்னிந்திய அரசியல் போக்குகள் பற்றி ஆய்வு நடத்திய பேக்கர் மற்றும் இர்சிக் ஆகிய இரு ஆங்கிலேயர்களின் முடிவுகளைமறுப்பதிலிருந்து தனது "சமூகத்துக்காக" ஆற்றும் கடமையை ராமமூர்த்தி தொடங்கியிருக்கிறார். மார்க்சிய ஆசான்களின் கோட்பாடுகளையேபுரட்டித் திரித்துச் சொல்லக் கூடிய ராமமூர்த்தி, பேக்கரையும் இர்சிக்கையும் புரட்டித் திரித்துச் சொல்வதில் வியப்பில்லை.

எதிராளியின் வாதங்களையும் கேள்விகளையும் மறுக்க முடியாத திருத்தல் வாதிகள் வழக்கமாக ஒரு தந்திரத்தை மேற்கொள்வதுண்டு. அதாவது எதிராளியே தனது வாதத்தையும் கேள்வியையும் தவறாக புரிந்து கொண்டதாகச் சொல்லி இவர்களுடைய வசதிக்கேற்ப எதிராளியின் வாதத்தையும் கேள்வியையும் புரட்டிச் சொல்வது; அப்படிப் புரட்டிய வாதத்துக்கும் கேள்விக்கும் பதில் சொல்லி தான் சரியாகச் சொல்லி விட்டதாகவும், எதிராளி தவறு செய்து விட்டதாகவும் பிரமையை உருவாக்குவது; பிறகு எல்லா திருத்தல்வாத சரக்குகளையும் கட்டவிழ்த்து விடுவது— ஆகிய தந்திரம்தான் அது. அதையே இதிலும் ராமமூர்த்தி கையாளுகிறார்.

'இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே முதலாளித்துவம் அளித்த புதிய வாய்ப்புக்களை நன்கு பயன் படுத்திக் கொண்டதே நீதிக் கட்சி உதயமானதற்குப் பின்னணி; அப்போது வளர்ந்து வந்த தொழில் நிறுவனங்களில் பிராமணர் அல்லாதோர் அதிகமாக ஈடுபட்டனர். முதலாளித்துவ உற்பத்தியில் தீவிரமாக இறங்க நவீன கல்வியும் அரசு எந்திரத்தில் ஆள் படையும் அவசியம்; ஆனால் கல்வித் துறையிலும், அரசு எந்திரத்திலும் பிராமணர்களே முன்னிலையில் இருந்தனர். அதை முறியடிக்க பிராமணர் அல்லாத உயர் சாதியினர் முயன்றனர். இந்த வகையில் ஏற்பட்ட முரண்பாடு அரசியல் வடிவம் பெறவே நீதிக்கட்சி உருவானது' என்றுகூறி நீதிக்கட்சியின் தோற்றத்தைபேக்கர் நியாயப்படுத்த முயற்சிக்கிறார்—இது பேக்கர் ஆய்வுகளைப் பற்றி ராமமூர்த்தி திரித்துப் புரட்டிச் சொல்லும் கருத்து. "முதலாளித்துவத் தொழில் வளர்ச்சியின் பின்னனியே நீதிக்கட்சி உருவாவதற்குக் காரணம்" என்று பேக்கர் கூறுவதாக இட்டுக் கட்டும் ராமமூர்த்தி அன்றைய காலகட்டத்தில் சுதேசித் தொழில்களே தென்னிந்தியாவில் கிடையாது; இருந்த தொழிற்சாலைகளும் ஆங்கிலேயர்கள் தொடங்கியவை தாம் என்று அவற்றின் வரலாற்றை அளிக்கிறார்.

நீதிக் கட்சியின் பின்னணி என்று பேக்கர் முன் வைக்காத வாதத்தை ராமமூர்த்தியே வலிந்து அவர் மீது திணித்து பிறகு மறுத்து விட்டு பின்வரும் முடிவை எழுதுகிறார்."......உண்மை நிலைக்கு மாறாகமுதலாளித்துவ வளர்ச்சிக்கு அவசியமான நவீனக் கல்வித் துறையிலும் பிராமணர் மிக அதிகமாகவும், பிராமணர் அல்லாதோர் மிகக் குறைவாகவும் இருந்ததைக் கொண்டு இரு சாராருக்கும் இடையே முரண்பாடு தோன்றியது எனக் கூறுவதும் அர்த்தமற்றது. (ராமமூர்த்தி நூல் பக்32)

முதலாளித்துவ முறையிலான நவீன தொழிற்சாலைகளை நிறுவி நடத்துவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டதுதான் நீதிக்கட்சி தோன்றியதற்கான பின்னணி என்று பேக்கர் கருதவில்லை. காலனிய அரசின் நிதி மற்றும் நிர்வாக நிர்ப்பந்தங்கள் காரணமாக அதிகாரத்தை மையப்படுத்தவும், அதிகார வர்க்கத்தைப் பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் காலனிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளினால் தலைநகர் சென்னை முக்கியத்துவம் பெற்றது; அதைப் பயன் படுத்திக் கொண்டு காலனிய அரசுக்கு ஊழியஞ் செய்து அரசியல் ஆதிக்கத்தை நிறுவியது மைலாப்பூர் பார்ப்பனக் கும்பல்; அதற்குப் போட்டியாக உருவானதுதான் நீதிக் கட்சி என்றே பேக்கர் கூறுகிறார் "அதீதமான பலம் வாய்ந்த மைலாப்பூர் காரர்களைத் துரத்தியடிப்பதற்காக வேண்டி நகர அரசியல் என்னும் ஒரு குறுகிய உலகத்துக்குள்ளே நடந்த சண்டை, ஒரு இயக்கந்தான் பார்ப்பனரல்லாதவர் நலன்களுக்கான, நோககத்துக்கான வேராக இருந்தது. பார்ப்பனரல்லாத அணியாக விரைவில் பிரபலமான நீதிக் கட்சி, மைலாப்பூர் அணியைப்போலவே உறவினர்களை, தொடர்பாளர்களைக் கொண்ட ஒரு கட்டுமானமாகவும், வலைப்பின்னலாகவும் வடிவம் பெற்றது. அதே போன்று அரசியல் நோக்கங்களைப் பெற்றிருந்தது. அரசாங்கத்தின் கடைக்கண் பார்வையை ஈர்த்து அப்போது பகிர்ந்தளிக்கப்படவிருந்த அதிகாரத்தினால் ஆதாயம் அடைய விரும்பியது" (பேக்கர்30—31)

நீதிக்கட்சியின் தோற்றத்துக்கு பேக்கர் முன் வைக்காத காரணத்தை இட்டுக்கட்டி, பிறகு மறுப்பதன் மூலம் பார்ப்பன ஆதிக்கத்துக்குப் போட்டியாக அது தோன்றவில்லை என்று நிரூபித்துவிட ராமமூர்த்தி முயன்றிருக்கிறார். அது மட்டுமல்ல, பார்ப்பன ஆதிக்கம் என்று ஒன்று எப்போதுமே கிடையாது என்று மறுப்பதுதான் அவரது நோக்கம். மைலாப்பூர் பார்ப்பன



படிப்பகம்

www.padippakam.com

கும்பலில் யார், யார் இருந்தார்கள் அவர்களின் பின்னணி, உறவுகள், தொடர்புகள் என்ன, என்ன; அவர்களது தகுதிகள், பதவிகள், செல்வாக்குகள்என்ன, என்ன; ஆங்கிலேய ஆட்சியாளர்களிடம் ''மடிப் பிச்சை'' பெறுவதற்காக அவர்கள் செய்த ஊழியங்கள், தாங்கிரசு—ஹோம்ரூல் இயக்கங்கள் மூலம் செய்ய தில்லுமுல்லுகள், நீதிக் கட்சிக்கு எதிராக செய்த சாகசங்கள்—ஆகியன பற்றி பேக்கரும், வாஷ்புருக்கும், இர்சிக்கும் எவ்வளவோ எழுதியிருக்கிறார்கள். மைலாப்பூர் பார்ப்பனக்கும்பலுக்கு எதிராகத் தோன்றி. பதவிப் போட்டியில் தோற்றுப்போய் காங்கிரசு—தேசியம், தீவிரவாதத்துக்குள் ஒளிந்து கொண்ட எழும்பூர் பார்ப்பனக் கும்பல் பற்றியும் விரிவாக எழுதியுள்ளனர்.

குறிப்பாக மைலாப்பூர் பார்ப்பனக் கும்பல் சென்னை பல்கலைக் கழகம், பச்சையப்பா அறக் கட்டளை, மாநகராட்சி, கவர்னரின் நிர்வாகக் குழு, அரசு தலைமைச் செயலகம், உயர் நீதி மன்றம், தர்மரக்கஷண சபை என்ற பெயரில் மாநிலக் கோவில்கள் மற்றும் மாவட்ட—வட்ட நிர்வாகங்களிலும் எப்படி ஆதிக்கத்துக்கு வந்தது என்று சென்ற இதழில் தொகுத்துப் பார்த்தோம். 1920 முதல் 1937 வரை மாண்டேகு—சேம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் இரட்டை ஆட்சிமுறை இருந்தது அதன்படி தேர்தல்கள், சட்டமன்றங்கள், மந்திரி சபைகள் மூலம் நீதிக்கட்சியினரதும், அவரது பினாமிகளுமான பார்ப்பனரல்லாதவர்கள் கணிசமான அளவு ஆட்சி அதிகாரம் பெற்றனர். 1920 இல் இரட்டை ஆட்சி முறை வருவதற்கு முன்பு ஆங்கிலேயப் பிரபுக்களிடம் இருந்த ''நேரடித் தொடர்பு'', ''செல்வாக்கு'' அதாவது அரசியல் விபச்சாரத்தின் மூலம் பார்ப்பனக் கும்பல் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்தது. இரட்டை ஆட்சி முறையிலும்—தேர்தல்கள் மூலம் நீதிக் கட்சியினர் மந்திரிசபை அமைத்திருந்த போதும்—அரசியல் விபச்சாரம் செய்து ஆங்கிலேயப் பிரபுக்களின் (கவர்னர்களின்) நிர்வாக சபையின் மூலம் பார்ப்பனக் கும்பல் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்தது. அப்போது ரத்து செய்யும் உரிமை உட்பட முழு அதிகாரமும் கவர்னரிடமே இருந்தது. அரசியல் ஆதிக்கத்துக்காக நேரடியாக, வெளிப்படையாக மோதிக் கொண்டதைவிடகவர்னரின் ''கடாட்சம்'' பெறுவதற்காக பார்ப்பனக் கும்பலும் நீதிக்கட்சிக் கும்பலும் நடத்திய அரசியல் விபச்சாரம் இன்னும் கேவலமாக இருந்தது.

''(கவர்னரின் நேரடி அதிகாரத்தின் கீழுள்ள) ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் (மந்திரிகளின் கீழுள்ள) மாற்றிக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் ஆகிய இரண்டுக்குமிடைய எழுந்த பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்காக மந்திரிகள் மற்றும் நிர்வாக கவுன்சிலர்கள் ஆகியோர் அடங்கிய அரசாங்கத்தின் இரு பகுதிகளும் ஒரு அமைச்சரவையாகக் கூட்டுவதற்கு கவர்னர் வெலிங்டன் முயன்றார்; உண்மையான அதிகாரம் வேண்டும் என்ற மந்திரிகளின் விருப்பத்தைத் திருப்திப் படுத்தவே இந்த ஏற்பாடு. இந்த அமைச்சரவை ஒரு ''ஆனந்தமயமான குடும்பம்'' என்று வெலிங்டன் பிரச்சாரம் செய்தார். ஆனால் விரைவிலேயே தனிப்பட்ட மந்திரிகளும், நிர்வாகக் கவுன்சிலில் இருந்த ஆங்கிலேய மற்றும் இந்திய சிவில் அதிகாரிகளும் அதிகார மற்றும் சலுகைக்காகப் பிடித்துக் கொண்ட தகராறினால் இந்தக் குடும்பம் உள் சண்டைகள் மிக்கதானது. 1923 இல் நிர்வாகக் கவுன்சிலின் சட்ட மந்திரியாக சி. பி. ராமசாமி ஐயர் நியமிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பிறகு வெலிங்டன் பிரபுக்குப் பதிலாக கோஷேன் பிரபு கவர்னராக வந்தார். சென்னை விவகாரங்கள் பற்றிய புதுக் கவர்னரின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு கவர்னரின் தலைமை ஆலோசகராக ராமசாமி ஐயர் தானே தாவிவிட்டார். அடுத்த சில ஆண்டுகளுக்கு சென்னை விவகாரங்களில் மிகவும் செல்வாக்குள்ள மனிதராகராமசாமி ஐயர்இருந்தார். ''மேதகு கோஷேன் பிரபுவின் தலைமையிலான எனது அரசாங்கம்'' என்று ஒரு முறை ராமசாமி ஐயர் தனதுசட்டமன்ற உரையைத் துவங்கியபோது, அவர் தன்னைத் தானே அப்படித்தான் கருதிக் கொள்கிறார் என்று பலரும் நம்பினர். நீதிக்கட்சியின் அமைச்சரவை வட்டாரத்தினர் முன்னேறுவதற்கு ராமசாமி ஐயரின் செல்வாக்கு இயற்கையாகப் பெரும் தடையாக இருந்தது; ஆனால் கவர்னரின் நிர்வாக சபையின் பிரதான மந்திரியாகவும் கறாரான பேர்வழியாகச்வும் இருந்த சர்.சார்லஸ் தோடன்டரையும் கூட இது ஆத்திரமூட்டச் செய்தது. ''ராமசாமி ஐயரை தோடண்டர் தம்பதிகள் எதையும் விடக் கடுமையாக வெறுக்கிறார்கள். தோடண்டரைக் காட்டிலும் ராமசாமி ஐயரேமேதகு கவர்னரின் அபிமானத்தைப் பெற்றவர் என்று தோடண்டர் தம்பதிகள், குறிப்பாக தோடண்டர் மனைவி கருதுகிறார்'' என்று மந்திரி ரெட்டி நாயுடு குறிப்பிட்டார்'' (பேக்கர் பக் 43)



ஆக நீதிக்கட்சி மந்திரிசபை அமைத்த பின்னும் மைலாபூர்ப் பார்ப்பனக் கும்பல் கவர்னர் மாளிகை அரசியல் விபச்சாரத்தின் மூலம் ஆதிக்கம் வகித்தது. அதற்குப் போட்டியாக கவர்னரின் தயவைப் பெற நீதிக் கட்சிக் கும்பல் கிளம்பியது. ஆனால் பார்ப்பன ஆதிக்கம்—பார்ப்பன கும்பல் என்றிருந்ததை அடியோடு மூடி மறைக்கிறார் ராமமூர்த்தி. மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்த பிராமணர் மற்றும் அல்லாத மேல்சாதியினரிடையே வேலைவாய்ப்புக்கான முரண்பாடு தோன்றியது உண்மைதான், ஆனால் பிராமண ஆதிக்கம் என்று எதுவுமே இல்லாதபோது மக்களைச் சாதி ரீதியாகப் பிளவு படுத்த ஆங்கிலேய அரசு முயன்றதாலும், ஆங்கிலேய அரசுக்கு சேவை செய்வதற்கு ஜமீன்—நிலப் பிரபுக்கள், தரகு வியாபாரிகள் முடிவு செய்ததாலும்தான் நீதிக் கட்சி தோன்றியது என்று நம்பச் சொல்கிறார் ராமமூர்த்தி.

''நிச்சயமாக கல்வித்துறையில் அந்தக் காலத்தில் அதிகமானவர் பிராமணர்களே இருந்தனர். இதனால் சர்க்கார் நிர்வாக எந்திரத்தின் எந்திரத் தொழில்களில் சம்பந்தம் இல்லாத வக்கீல்கள் டாக்டர்கள் போன்ற தொழில்களில்பிராமணர்களே அதிகமாக இருந்தனர். இதன் காரணமாக பிற்காலத்தில் பிராமணர் அல்லாத மேல் ஜாதிக்காரர்களும் ஆங்கிலக் கல்வி பயல முன்வந்தபோது சர்க்கார், நீதி, நிர்வாக துறைகளிலும், வக்கீல்கள், டாக்டர்கள் போன்ற துறைகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருந்தன. இதைத்தான் இர்சிக் என்பவர் தனது நூலில் குறிப்பிடுகிறார். இவர்களுக்கிடையே இந்தக் காரணத்தினால் முரண்பாடுகள் தோன்றியது. (ராம.மூர்த்தி நூல் பக் 32)

வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் ஆங்கிலேய கல்வி பயின்ற பிராமணர் மற்றும் அல்லாத மேல் சாதியினருக்கும் ஏற்பட்ட மத்திய தரவர்க்க முரண்பாட்டை ஆங்கிலேய காலனிய அரசும், நீதிக்கட்சியினரும் பயன்படுத்திக் கொண்டதாக ராமமூர்த்தி சித்தரிக்கிறார். முரண்பாடு வேலை வாய்ப்புக்களைப் பெறுவதில் மட்டுமில்லை. வேலைகளுக்கு நியமனம் செய்யும் அதிகாரத்துக்கான அரசியல்முரண்பாடு, அப்போது காலனிய அரசு இந்தியருக்குப் பகிர்ந்தளித்த அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கான அரசியல் முரண்பாடு—ஆகியவையே—மைலாப்பூர் பார்ப்பனக் கும்



படிப்பகம்

www.padippakam.com

பலுக்கும் நீதிக்கட்சிக் கும்பலுக்கும் இடையிலான அரசியல் மோதலாகியது. இந்த அரசியல் முரண்பாட்டில் ஆதாயம் அடைய இரண்டு துரோகக் கும்பல்களுமே காலனிய அரசுக்கு ஊழியஞ்செய்தனர்.

வைஸ்ராய்—கவர்னர்மாளிகைகளில் மடிப்பிச்சை கேட்பதால் மட்டும் அரசியல் ஆதாயம் அடைய முடியாது என்று கருதிய "புத்திசாலிகளான" இந்தத் துரோகக் கும்பல்கள் அரசியல் கட்சி—இயக்கங்கள் மூலம் நிர்பந்தம் கொடுக்கவும், செல்வாக்கைக் காட்டவும் கூட செய்தன. இதிலும் முந்திக்கொண்டது முதலில் தோன்றிய மைலாப்பூர் பார்ப்பனக் கும்பல். பிறகு வந்தது எழும்பூர் பார்ப்பனக் கும்பல். அதாவது காங்கிரசுக்குள்ளும் பிறகு ஹோம்ரூல் இயக்கத்துக்குள்ளும் புகுந்து தலைமையைக் கைப்பற்றிக் கொண்டது மைலாப்பூர் கும்பல். தாமதமாக வந்த எழும்பூர் கும்பல் தேசியவாதிகள் என்கிற பெயரில் காங்கிரசின் "தீவிரவாதப்" பிரிவாக நடித்தது. இப்படி காங்கிரசு-ஹோம்ரூல் இயக்கங்களுக்குள் பார்ப்பன ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டிருந்ததால் பார்ப்பனரல்லாத மேல்சாதி மிட்டா மிராசுகள், ஜமீன்—நிலப்பிரபுக்கள், பெரும் வியாபாரிகள் தனியாக தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை நிறுவிக் கொண்டனர்.

காங்கிரசு—ஹோம்ரூல் இயக்கத்துக்குள் பிராமண ஆதிக்கம் இருந்ததாகக் கூறுவது பொய் யென்று மறுப்பதற்காக ராமமூர்த்தி தனக்கே உரிய முறையில் பித்தலாட்டம் செய்துள்ளார். "சுதந்திர இயக்கத்தல் இருந்தவர்கள் யார்?" என்று தலைப்பிட்டு ஒரு அத்தியாயம் எழுதியுள்ளார். அதிலே தமிழ்நாடு, ஆந்திரம், மகாராஷ்டிரம் தவிர மற்ற பகுதிகளின் காங்கிரசு கட்சிக்குள் பிரபலமான சில தலைவர்களின் பெயர்களையும் சாதிகளையும் குறிப்பிட்டு இவர்களெல்லாம் பிராமணர்களா? இல்லையே! ஹோம்ரூல் இயக்கத்தைத் துவங்கிய அன்னிபெசண்டும் ஆங்கில மாதுதானே! அப்படியிருக்க காங்கிரசு—ஹோம்ரூல் இயக்கங்களில் பிராமணர் ஆதிக்கம் என்பது உண்மைக்குப் புறம்பானது என்று வாதிடுகிறார்.

காங்கிரசு பார்ப்பன ஆதிக்கத்தில் இல்லை என்று நிரூபிக்கப் போய் அதோடு சம்பந்தமில்லாத கேதார் கட்சித் தலைவர்கள், பகத்சிங் போன்றவர்கள் பெயரையும் வலியச் சேர்த்துக் கொண்டு இவர்களெல்லாம் பிராமணர்களா என்று சமர்த்தாக கேள்வி கேட்கிறார் ராமமூர்த்தி. காங்கிரசு—ஹோம்ரூல் இயக்கங்களில் பார்ப்பனரல்லாதார் இல்லையா இருந்தனரா என்பவல்ல கேள்வி. இன்றைய ஆர்எஸ்எஸில் கூட பார்ப்பனரல்லாதார் இருக்கின்றனர்; ஆனால் அது பார்ப்பணீய இந்துமத அமைப்பாக இல்லையா? அதுபோகலாங்கிரசும்-ஹோம்ரூலும் பார்ப்பணீய வர்ணாசிரமக் கொள்கையை ஏற்றிருந்தன; ராமமூர்த்தியே ஒப்புக் கொண்டதைப் போல குலக்கல்வி—வர்ணாசிரம அடிப்படையில் நடத்தினர்.

> காங்கிரசு கட்சி பார்ப்பன ஆதிக்கத்தில் இல்லை என்று நிரூபிக்க பிரபலமான சில தலைவர்களின் பெயர்களையும் சாதிகளையும் குறிப்பிட்டு இவர்களெல்லாம் பிராமணர்களா என்று சமர்த்தாக கேள்வி கேட்கிறார் ராமமூர்த்தி. இன்றைய ஆர். எஸ். எஸ்சில்கூட பார்ப்பனரல்லாதோர் இருக்கின்றனர். ஆனால் அது பார்ப்பனிய—இந்துமத அமைப்பாக இல்லையா?

நேரு, மாளவியா, சுக்லா போன்ற பிராமணர்கள் காங்கிரசுத் தலைமையில் இருக்கத்தான் செய்தார்கள் என்று கூறும் ராமமூர்த்தி, "தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் மகாராஷ்டிரத்திலும் முன்னிலையில் நின்றவர்களில் கொஞ்சம் அதிகம் பேர் பிராமணர்களாக இருந்தனர். உதாரணமாக ஆந்திராவில் டி. பிரகாசம், புலுசு சாம்பமூர்த்தி, நாகேசுவரராவ் பந்துலு, கொண்ட வெங்கடசுப்பையா போன்றவர்கள் பிராமணர்களாக இருந்தனர். தமிழ்நாட்டில் ஸெ். சீனிவாச அய்யங்கார், இராஜகோபாலாச்சாரி, எஸ். சத்தியமூர்த்தி, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், வ. வே. சு. ஐயர் முதலானோர் முன்னணியில்நின்றனர்" (ராமமூர்த்தி நூல் பக். 49—50) என்று ஒப்புக்கொள்கிறார்.

ஆந்திராவிலும், தமிழ்நாட்டிலும்தான் நீதிக்கட்சி இருந்தது. முக்கியமாக அன்று அரசியல் ஆதிக்கம் வகித்த சி பி. ராமசாமி ஐயர் பற்றி குறிப்பிடாவிட்டாலும், ராமமூர்த்தி ஒப்புக்கொள்வது போல இங்கு தேசிய இயக்கத்தில் முன்னணியில் "கொஞ்சம் அதிகம்" பேர் பிராமணர்களாக இருந்தனர். அதுதான் பிரச்சினை.

ஒப்புக்கொண்ட அடுத்த வரியிலேயே ஈ. வெ. ரா, திரு. வி. க, மா. சிங்காரவேலர், சக்கரைச் செட்டியார் போன்ற பார்ப்பனரல்லாத தலைவர்களும் தேசிய இயக்கத்திலிருந்ததைச் சொல்லி சப்பைக் கட்டும் போடுகிறார். இவர்களும் காங்கிரசின் பார்ப்பனஆதிக்கத்தை எதிர்த்தனர் அல்லது பார்ப்பனிய வர்ணாசிரமத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர். வர்ணாசிரம அடிப்படையிலான தேசியப் பள்ளிகளுக்கெதிராக காஞ்சி காங்கிரசு மாநாட்டில் பெரியார் கொண்டு வந்ததீர்மானத்தைபெரும்பான்மையாக நிராகரித்ததும், காந்தி வர்ணாசிரமத்தை ஏற்று அறிக்கை விட்டதும், இட ஒதுக்கீடு தீர்மானத்தை சத்தியமூர்த்தி தலைமையில் காங்கிரசு எதிர்த்ததும் காங்கிரசில் பார்ப்பனீய ஆதிக்கமிருந்ததைத்தானே நிரூபிக்கின்றன!

காங்கிரசில் பிராமணர்கள் முன்னணியில் இருந்ததையும், அரசு, நீதி, நிர்வாகத்துறையில் அதிகமாக இருந்ததையும் ஒப்புக்கொள்ளும் ராமமூர்த்தி இது ஏதோ மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பிராமணர்களின் இயல்பான பங்கேற்பாக சித்தரிக்கிறார். "இந்தச் சென்னை ராஜதானியில் தமிழ்நாடு ஆந்திராவைப் பொறுத்தமட்டில் வரலாற்றுப் பின்னணியின் காரணமாக பிராமணர்களே முதன் முதலில் ஆங்கிலக் கல்வி பயிலத் தொடங்கினர். இதன் விளைவாக அரசு நீதி நிர்வாகத் துறைகளிலும் ஆங்கிலக் கல்வியின் மூலம் பயிலும் மருத்துவம், சட்டம், பொறியியல் முதலிய துறைகளிலும் அவர்களே அதிகமாக தொழில் நடத்தினர். இதனால் மத்தியதர வர்க்கத்தை முதலில் ஈர்த்த தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணியில் அவர்கள் அதிகமாக நின்றனர். (ராமமூர்த்தி பக். 53).

உண்மையில் மத்தியதர வர்க்கத்துப் பார்ப்பனர் அல்ல, நீதிக்கட்சியினரைப் போலவே மிட்டா—மிராசுகள், ஜமீன்—நிலப்பிரபுக்களாக இருந்தவர்கள், சட்டம், மருத்துவத் துறைகளில் பெருமளவு சம்பாதித்த புதுப்பணக்காரர்களான பார்ப்பனரே காங்கிரசு—ஹோம்ரூல் இயக்கங்களில் ஆதிக்கம் வகித்தனர். சி பி. ராமசாமி ஐயரின் சேத்துப்பட்டு ஐயர் குடும்பமும், எஸ். சீனிவாச ஐயங்காரின் வேம்பாக்கம் ஐயங்கார் குடும்பமும் நடுத்தரக் குடும்பமா? டி. எஸ். எஸ். ராஜன் 40 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், நிலபுலன்களும் கொண்டு மின்சாரக் கம்பெனியொன்றிலும் முதலீடு போட்டிருந்தவர். சேதுரத்தினம் ஐயர் திருச்சியில் ஒரு நிலப்பிரபு. ராஜகோபாலாச்சாரியும், கஸ்தூரி ரெங்க ஐயங்காரும் கூட மேட்டுக் குடியினரே.

நீதிக்கட்சி கும்பலின் தேசத் துரோகத்தை மூடிமறைத்து பார்ப்பனரல்லாதவர் உரிமைப் பிரச்சினைதான் என்று வீரமணி போன்றவர் ஏய்ப்பதைப் போலவே, காங்கிரசு—ஹோம்ரூல் இயக்கங்களில் பார்ப்பனர் ஆதிக்கத்தை மூடிமறைத்து தேசிய இயக்கத்தில் பார்ப்பன மத்தியதர இயக்கத்தினர் முன்னணியில் இருந்ததாக ராமமூர்த்தி ஏய்க்கிறார்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

## மாமல்லபுரம் அரசு சிற்பக்கலைக் கல்லூரி

# மாணவர்கள் போராட்டம் இலக்கை நோக்கி...

கணபதி ஸ்தபதி. மாமல்லபுரத் இயங்கிவரும் அரசு சிற்பக் கலைக் கல்லூரியின் ஆயுட் கால முதல்வராகத் தனக்குத்தானே பட்டம் சூட்டிக்கொண்டுள்ள 'அறிவாளி'. '61ம் ஆண்டில் இக்கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்ற இவர் 61 வயதாகியும் அப்பதவியில் அட்டையாக ஒட்டிக் கொண்டிருப்பவர். கோரிக்கை வைத்து போராடும் மாணவர்களை போலீசை வைத்து ஒடுக்குவதையே தனது வாடிக்கையாகக் கொண்ட இந்த அறிவாளி இப்போது ஆடிப்போய் நிற்கிறார். போர்க்குணத்தோடு போராடும் மாணவர்கள் முன் முகங் கொடுத்து நிற்க முடியாமல் தலைமறைவாக ஓடவேண்டிய 'துர்பாக்கிய' நிலைக்கு தள்ளப்பட்டார்.

1957ல் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரியில் தற்போது 4 மாணவிகள் உட்பட 250 மாணவர்கள் சிற்பம் மற்றும் கோயில் கட்டிட கலையில் பட்டம் பயிலுகின்றனர். சென்ற ஆண்டு, முதலாமாண்டு பட்டப் படிப்பு தேர்வு எழுதிய 14 மாணவர்களின் தேர்வு முடிவுகள், சென்னை பல்கலைக்கழகத்திலிருந்து கடந்த அக்டோபர் மாதமே கல்லூரிக்கு வந்துவிட்ட பிறகும் தனக்கு நேரம் சரியில்லை என்பதால் அதை வெளியிடாமல் பதுக்கி வைத்துக் கொண்டார் இந்த அறிவாளி.

கடைசியில் கடந்த ஜனவரி மாத இறுதியில் ஒரு 'நல்ல' நாளில் அதை வெளியிட்டார். இருந்தும் அவருக்கும் 'சனி' விலகியபாடில்லை! மாணவர்கள் போர்க்கோலம் பூண்டனர். தேர்வு எழுதிய 14 மாணவர்களில் 12 பேர் தோல்வியுற்றிருந்தனர். காரணம், மாணவர்களின்படிப்பின்மை அல்ல; அறிவாளி முதல்வரின் அற்ப புத்தியும் அசட்டைத்தனமுமே இதற்கு முழுமுதற் காரணம்.

கடந்த ஆண்டு தேர்வு எழுதும்போது கேள்வித்தாளை பார்த்ததுமே அதிர்ச்சியுற்ற மாணவர்கள் தங்கள் பாடத் திட்டத்திற்கு சம்பந்தமே இல்லாத கேள்விகள் இடம் பெற்றிருப்பதை சுட்டிக் காட்டி தேர்வு எழுத மறுத்தனர். அப்போது இந்த அறிவாளியும், அவருடன் இருந்த தேர்வு கண்காணிப்பாளரும், சென்னை பல்கலைக்கழக தேர்வாணைக் குழுவின் அசட்டைதனத்தால் நடந்துவிட்ட தவறுக்கு வருத்தம் தெரிவித்து எப்படியாவது தேர்வு எழுதிவிடுமாறு மன்றாடினார்கள். பொருந்தாக் கேள்வித்தாகளைப் பற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரியப்படுத்தி அதற்காக மாணவர்களுக்கு உபரியாக 40 மதிப்பெண்கள் வழங்க ஏற்பாடு செய்வதாகவும் உறுதி கூறினார்கள். மாணவர்களும் சுளையாக 40 மதிப்பெண்கள் வருகிறதே என்ற ஆசைக்கு ஆட்பட்டு தேர்வு எழுத சம்மதித்தனர்.

ஏமாந்துவிடப் போகிறோம் என்ற முன்னெச்சரிக்கையுடன் அவர்களுடைய உறுதிமொழியை மனுவாக எழுதிக் கொடுக்கச் சொல்லி கல்லூரி நிர்வாகத்தின் மூலமாக அதை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தனர். கல்லூரி முதல்வரோ நிலைமையைச் சமாளிக்க தான் கையாண்ட வழிமுறையை பல்கலைக்கழகத்திடம் எடுத்துச் சொல்லி நல்லபெயர் தட்டிக் கொண்டதோடு மனுவையும் கிழித்துப் போட சம்மதம் தெரிவித்திருக்கிறார். தேர்வு எழுதிய அனைவரையும் 'பெயில்' ஆக்கினால் பிரச்சினை வரும் என்பதற்காக இருவருக்கு 'பாஸ்' போட வைத்து மற்றவரை 'மக்கு'கள் என இனம் பிரித்து முத்திரை குத்திவிடலாம் என கனவு கண்டார்.

விழித்தெழுந்த மாணவர்கள் கொதித்தெழுந்து போராட்டத்தில் இறங்கினர். வெளிநடப்பு, வேலை நிறுத்தம் என போராட்டத்தை தீவிரப்படுத்தினர். மாணவர்களின் 'ஒழுங்கின்மை'யை காரணம் காட்டி கல்லூரியை இழுத்து மூட எத்தணித்த 'அறிவாளி'க்கு ஆப்பறைந்து உள்ளிருப்பு போராட்டத்தை துவக்கினர். 'அறிவாளி' முதல்வரோ போராடும் மாணவர்களை சமாளிக்க கல்லூரி நிர்வாகத்தை முன்தள்ளிவிட்டு தலைமறைவானார். பீதியடைந்த நிர்வாகமும் அறிவாளியை கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடியது.

மாணவர்கள் முறையாக பிரச்சாரத்தை பகுதி மக்களிடம் எடுத்துச் சென்று போராட்டத்திற்கு ஆதரவு கோரினர். மாணவர்கள் கோரிக்கையும், முதல்வரின் தலைமறைவும் மாமல்லை முழுவதும் பரவியது கதிகலங்கிய நிர்வாகம் கல்லூரியை 'காவல்' துறையிடம் ஒப்படைத்தது. கல்லூரி முழுவதும் போலீசார் குவிக்கப்பட்டனர். தலைமறைவான முதல்வரும் போலீசு பாதுகாப்புடன் கல்லூரியில் நுழைந்தார். ஒருபுறம் கல்லூரியில் போலீசை விட்டு மாணவர்களை மிரட்டிக்கொண்டே மறுபுறம் கோரிக்கையை ஏற்க 15 நாள் அவகாசம் வேண்டுமென கூழைக் கும்பிடு போட்டார்.



கதிகலங்கிய நிர்வாகம் கல்லூரியை 'காவல்' துறையிடம் ஒப்படைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினையை ஆறப் போட்டு போராடும் மாணவர்களின் முன்னோடிகளை பழிவாங்களத்தணித்த அறிவாளியின் 'அறிவுரை'யை மாணவர்கள் ஏற்கவில்லை. சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்து 10 மாணவர்களை அதில் இறக்கிவிட்டு மற்ற மாணவர்கள் பிரச்சினையை மீண்டும் மக்களிடம் கொண்டு சென்றனர். மாணவர்களின் உறுதியைக் கண்ட மாமல்லை மக்கள் அனைவரும், போராட்டத்திற்கு பேராதரவு அளித்தனர். மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தாங்களே பெருமளவில் பிரசுரங்கள் அடித்து தம் கைபட விநியோகித்தனர்.

இப்பிரச்சினைக்கு சம்மந்தமே இல்லாத, ஆர்.ஐ., டெபுட்டி தாசில்தார், மற்றும் தாசில்தார் போன்றோர் முதல்வருக்கு முட்டுக் கொடுக்க போராட்டத்தில் மூக்கை நுழைத்து மூளியாகி போனார்கள்.

மாணவர்கள் ஒவ்வொரு சம்பவத்தையும், போலீசு மிரட்டலிருந்து, அதிகார வர்க்கக்கும்பல்களின் மிரட்டல் வரை, அக்கும்பல் முதல்வருக்கு துணை போவதை சளைக்காமல் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சென்றனர்.

பொதுமக்கள் பிரச்சினையில் நேரிடையாக தலையிட முன் வந்து மாமல்லை அனைத்து மக்களின் சார்பாக இருபது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து கொண்டு போராடும் மாணவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு முதல்வரைச் சென்று சந்தித்தனர். குலைநடுக்கம் கண்ட அறிவாளி, 'இப்பிரச்சினையை தாம் மாணவர்களுக்கு சாதகமாக தீர்காவிடில் தன் பதவியை 15 நாட்களுக்குள் ராஜினாமா செய்துவிடுவதாக' உறுதியளித்தார். பொதுமக்களும் அதற்கு இசைந்து மாணவர்களிடம் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுமாறு கோரினர்.

மாணவர்கள், முதல்வரின் கடந்தகால பித்தலாட்டங்களை அவர் எதிரிலேயே தோலுரித்து முதல்வர் வாக்குறுதியை நிறைவேற்றவில்லையென்றால் திரும்பவும் உங்களிடம் (மக்கள்)தான் வருவோம் என்று கூறினர். உணர்ச்சி மேலிட்ட பொதுமக்கள், மாணவர்களிடம் 'இனிமேல் நாம் ஒன்றாகவே சேர்ந்து போராடுவோம்' என்று மாணவர்களுடன் தங்களையும் இணைத்துக் கொண்டு மக்கள் மன்றம் என்ற போராட்ட புது அமைப்பை உருவாக்கினார்.



மாணவர்கள் 'அறிவாளி'க்கு ஆப்பறைந்து உள்ளிருப்பு போராட்டத்தை துவக்கினர்.

மாணவர்கள் போராட்டம் என்றாலே பொதுமக்கள் முகஞ் சுழிக்கும் அளவு, மாணவர்களை பொறுக்கி கலாச்சாரத்தில் சீரழித்துக் கொண்டிருக்கும், ஓட்டுப் பொறுக்கிகளின் தலைமையில் திசைமாறி போகும் மாணவர்கள் சங்கங்கள் மத்தியில், பொதுமக்களின் அளப்பரிய ஒத்துழைப்புடன் தோன்றியிருக்கும் மாமல்லை அரசு சிற்பக் கலைக் கல்லூரி மாணவர்கள், மாமல்லை பொதுமக்கள் "மக்கள் மன்றம்" இருண்ட வானத்தில் தோன்றியிருக்கும் ஒரு விடிவெள்ளி என்றால் அதுவும் மிகையல்ல.

புதிய ஜனநாயகவாசகர் வட்டம்
மாமல்லை.

அமைப்புச் செய்தி:

## சிதைத்தாலும் எரித்தாலும் செங்கொடி பணியாது!

கல்லக்குறிச்சி வட்டம், சங்கராபுரத்தில் பாசிஸ்ட் எம்ஜிஆரின் மரணத்தையடுத்து எமது விவிமு கொடியை அதிமுக ரௌடிகள் அரைக் கம்பத்தில் இறக்கியதையும் பின்னர் எமது தோழர்கள் 'பாசிஸ்டுகளின் மரணத்துக்கு செங்கொடி தாழாது' என்று போர்டு எழுதி வைத்து மீண்டும் கொடியேற்றியதையும், அதனால் ஆத்திரமுற்ற ரௌடி இளங்கோ கொடிக் கம்பத்தை முறித்துத் தள்ளியதையும், பின்னர் பஞ்சாயத்துக்குப் போன எமது தோழர்களைத்தாக்கியதையும் ஏற்கனவே வாசகர்கள் அறிவார்கள்.

சமூக விரோதிகளால் முறிக்கப்பட்ட கொடிக் கம்பத்திற்குப் பதிலாக பகுதி தோழர்களின் உத்வேகமான முன்முயற்சியாலும், சமூக நண்பர்களின் ஆர்வமான பங்களிப்போடும் இரும்பிலான கொடிக்கம்பம் நடப்பட்டு கடந்த ஜனவரி இருபத்தைந்தாம் தேதியன்று விவிமு கொடியேற்றப்பட்டுடது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து 200க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் திரண்டு எதிரியை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தும் முழக்கங்களோடு எழுச்சிமிகு ஊர்வலம் நடத்தி ஏற்றப்பட்ட விவிமு செங்கொடி பட்டொளி வீசிப் பறந்தது. இந்நிகழ்ச்சி எதிரிகளை கதிகலங்க வைத்ததோடு தோழர்களை எதற்கும் தயார் என்ற நிலைக்கு உருவாக்கியுள்ளது. கொடியேற்றி சிறு உரையாற்றிய அமைப்பாளர் தோழர் கதிர்வேலன், எதிரிகளுக்கு இந்த வகையில் 'நன்றி' தெரிவித்துக் கொண்டதோடு, மாவோவின் 'எதிரி தாக்குவது நல்லது' எனும் மேற்கோளையும் எடுத்துக் கூறினார். எதிரிகளை எப்போதும் சந்திக்க தயாராக உள்ள தோழர்களைக் கொண்ட அமைப்பு என்பதை நிரூபிக்கும் வகையில் விவிமு அடுத்த கட்டவளர்ச்சியை நோக்கி முன்னேறி வருகிறது.

தகவல்:
விவசாயிகள் விடுதலைமுன்னணி
கல்லை வட்டம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை., சென்னை 600015. அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம்பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு) சென்னை-600094.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இது குழந்தைகளுக்கான கண்காட்சியோ, வர்த்தகப் பொருட்காட்சியோ அல்ல. டில்லி தலைநகரில் பிரமல்யமாகிவரும் 'பெரிய' மனிதர்களுக்கான 'பலூன் மேளா' விளையாட்டு இது. கண்ணைப் பறிக்கும் பலவண்ண ராட்சத பலூன்களில் வெப்பக் காற்றை அடைத்தவுடன் தானாக மேலே கிளம்பி உயர உயர போய்க் கொண்டிருக்கும். மேகக் கூட்டம் போல பறந்து ஒன்றை ஒன்று துரத்தும். பந்தயத்தில் முன்னால் வரும் ராட்சத பலூனுக்கு அதில் அமர்ந்து வரும் 'வீரர்'களுக்கு பரிசு, பணம் 'எல்லாம்' உண்டு. பருத்த ஆலமரம் 'சைசில்' இருக்கும் இதன் துணியை விரிக்கவும், அதனுள் வெப்பக் காற்று அடைக்கவும், ராட்சத மின் விசிறிகளும், இயந்திர மோட்டார்களும் தேவை. பலூன் விலை மட்டும் ஏறக்குறைய 2 லட்சம் ரூபாய்.

கண்ணைக் கவர்ந்து மனதைக் கொள்ளையிடும் இவ்விளையாட்டு சாகசம் நிறைந்ததாம். இருந்தாலும் பாதுகாப்பு மிக்கதாம் (தொப்பை மேல் அவ்வளவு பக்தி). இப்பலூன்களைக்கண்டு உள்ளூர் பண முதலைகளும் வீங்க வேண்டும் என்பதற்காக மாய்ந்து மாய்ந்து இவ்விளையாட்டை புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

இதோ, ஓடி ஆடி விளையாட வேண்டிய வயதில், அறிவையும் ஆற்றலையும் சேகரித்து வளர வேண்டிய பருவத்தில் இயற்கை விதிகளுக்கே மாறாக சின்னஞ்சிறு வயதில் குடும்பப் பொறுப்பை சுமந்துக் கொண்டிருக்கும் உழைப்பாளியின் குழந்தை— குழந்தைகள்— நாளைய வரலாற்றின் தூண்கள் என்று பசப்பிக் கொண்டே அவர்கள் முழுமனிதர்களாக மாறுவதற்கு தேவையான கல்வி அறிவைக்கூட இந்த ஆட்சிமுறை இவர்களுக்கு கொடுப்பதில்லை. எதிர்காலத்தில் உழைத்து பிழைப்பதற்கு தேவையான உடல் வலிவையும் இக்குழந்தைகளிடம் விட்டு வைப்பதில்லை இந்த பிணந்தின்னிகள். சிவகாசி வீதிகளில் உடலை அரிக்கும்கந்தக துகள்களுக்கு மத்தியில், ...வடக்கேமூச்சுக்குழலை அடைக்கும் சிலேட்டு, கண்ணாடி தயாரிக்கும் தொழிற் கூடங்களில் நெசவுக் கூடங்களில். இப்படி ஆயிரத்தெட்டு வழிகளில் கொடூரமான முறையில் இவர்கள் உழைப்பை சுரண்டி, தாய் மடியில் குடித்த பாலை இக்குழந்தைகளிடமிருந்து பிஞ்சுப் பருவத்திலேயே உறிஞ்சிவிடுகிறார்கள்.

உழைப்பாளிக்கு மட்டுமல்ல, அவன் குழந்தைக்குகூட ஓய்வு நேரம், பொழுது போக்கு, விளையாட்டு என்பதெல்லாம்தண்டனைக்குரிய குற்றங்கள். உழைப்பில் ஈடுபடாமல் போனால் கிடைக்கும் கால் வயிறு கஞ்சிக் கூட கிடைக்காது என்று அவர்களை வாழ்க்கையின் சுமையில் அழுத்திவிட்டு, தனக்கு மட்டும் தொட்டில் முதல் சுடுகாடுவரை சுகபோக வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கும் உடமை வர்க்க சதைப் பிண்டங்களை அறுத்தெறிவது எப்போது?

